உ

ஜாதக ராஜ மனோரஞ்சிதம்

மலர் 3-மேஷ லக்கினம்



ஆசிரியர் :

C. G. ராஜன், B. A. (Mathematics)

என்னும்

C. கோவிந்த ராஜன், B. A. (Maths)

(Tahsildar and Taluk Magistrate, Retired.)

All Rights Reserved to the Author.

[முதல் பதிப்பு] 1956-57 [விலை அணா

புத்தக விளம்பரம் 1957-ஷு

ஜாதக கணிதம் ஓராம் பாகம் என்னும் ஜோதிட கிரக சட்பலம் ஆயுள் கணிதம் நான்காம் பதிப்பு:— இதில் தசவர்க்கம், கிரகசட்பலம், கிரகங்களின் வலிவின் தாரதம்மியம், பாவச்சக்கிரம், துவாதசபாவபலம், உச்சபலம், திக்குப் பலம், பட்சபலம், கிரக யுத்த பலம், ஹோராபலம், அயன பலம், கிரக திருஷ்டி பலம், முதலிய 24-வித பலங்கள், ஆயுள், இவைகளை வெகு சுலபமாகக் கணிக்க அநேக வாக்கியங்களும் (டேபில்ஸ்) குளிகாதி ஐவர், தூமாதி ஐவர் ஸ்புட கணனமும், பிராணஸ்புடம், தேகஸ்புடம், மிருத்யுஸ்புடம், உதாரணங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கிரகங்களின் வலிவை அனுசரித்து பலாபலன்கள் அறிவதற்கும், ஆயுள் கணிதத்தில் அரணம் செய்வதற்கும், பிருஹத் ஜாதகம், ஸ்ரீபதி ஜாதக கர்மபத்ததி, கேசவ ஜாதக கர்மபத்ததி, பலதீபிகை, இவைகளைச் சுலபமாகவும், நன்ருயும் அறிவதற்கும் இப்புத்தகம் மிகவும் உபயோகமாகும். இதை யாவரும் பிறருடைய உதவியன்றித் தாமே படித்துத் தெரிந்து கொள்ளலாம். இது கவர்மென்ட்டு டெக்ஸ்டு புக் கமிட்டியாரால் லைப்ரரி உபயோகத்திற்காக அங்கீகாரஞ் செய்யப்பட்டது. இது சி. ஜி. ராஜன் பி. ஏ. (மாத்தமாடிக்ஸ்) அவர்களால் எழுதப்பட்டது. டிம்மி சயிஸ் 344-பக்கம் உடையது. ரூ. 3-8-0

(1) பி. மேற்படி 1-வது பாகத்திலுள்ள சேஷ்டா பலம் கணிக்க 33-வது வாக்கியத்தின் துடர்ச்சி, 1942-வது ஷு முதல் 1953-வது வருஷம் வரை கிரகங்களின் உவா, உவாந்தம் வக்கிரம் முதலியன. ரூ. 0-4-0

6300 வருஷத்திய நவக்கிரக ஸ்புடகணனம் :— இராஜ ஜோதிட கணிதம் என்னும் சித்தாந்த இராஜ சிரோமணி (கிரக கரணம்) சி. ஜி. ராஜன் பி. ஏ. அவர்களால் செய்யப்பட்டது.

இந்தப் புத்தகத்தின் உதவியால் கலியுகம் பிறப்பதற்கு முந்தி 98-ம் வருஷம் முதல் கலியுகம் 6022-வரைக்கும் உள்ள காலங்களில்எந்த காலத்திற்காகிலும் கிரகஸ்புடங்கள் சுலபமாகவும் துல்லிபமாகவும் கணிக்கலாம். கிரக ஸ்புடங்களைக் கணிக்க அநேக வாக்கியங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கணித மார்க்கங்களை விளக்கும் பொருட்டு ஒவ்வொரு கிரகஸ்புடம் செய்யும் வழியையும் உதாரணத்தால் விளக்கிக் காட்டியிருக்கிறது. கணிதத்தைச் சுலபமாக்க வேண்டிய சாஸ்திர மார்க்கங்களையும் அனுஷ்டித்திருக்கிறது. நமது பழைய வான சாஸ்திர மார்கங்களால் துல்லிபமான ஸ்புடங்கள் அடைய வேண்டியதற்காகச் செய்ய வேண்டிய மார்க்கங்களையும் இந்த புஸ்தகத்தில் அனுஷ்டித்து இருக்கிறது. மேலே சொல்லிய கிரகஸ்புட வாக்கியங்களும்அன்றி அடியிற்கண்ட விஷயங்களும் இந்த புத்தகத்தில் அடங்கி யிருக்கின்றன—அவை (1) நட்சத்திர ஹோராமணி 8-வாக்கியங்களுடன் (2) கிரகணம் சம்பவிக்குமா இல்லையா என்பதைத் தீர்மானஞ் செய்தல் (3) தற்காலத்தில் அனுஷ்டானத்தில் உள்ள பலவிதமான மணி மிணிட்டுகள், (4) அயனும்சம் (5) வகுஜாகணிதம் (6) அங்ககணிதம், (7) தசாம்ச கணிதம், (8) கிராந்தி கணிதம் முதலிய கணிதங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது சி. ஜி. ராஜன் அவர்களால் செய்யப்பட்டது 3100 பி.சி. முதல் 3200 எ. டி. வரையில், இங்கிலீஷில் ராயல் சயிஸ் 510-பக்கம் இதன் விலை ரூ. 9-0-0

தமிழில் 564-பக்கங்கள் அடங்கியது, ராயல் சயிஸ்—கொஞ்சம் பிரதிகளே இருக்கின்றன. இதன் விலை ரூ. 10-0-0

ஜாதக ராஜ மனோரஞ்சிதம்

மலர் 3-மேஷ லக்கினம்

இது சமஸ்கிருத சுக்கிரநாடி, கேரள நாடி, துருவ நாடி, சத்திய சம்ஹிதை, சர்வ சங்கிரஹ நாடி, யோக நாடி, சந்திர நாடி, குரு நாடி, முதலிய நாடிக் கிரந்தங்களிலும் இதர ஜோதிட சாஸ்திரக் கிரந்தங்களிலும் ஜாதக பலாபலன்களை நிர்ணயஞ் செய்ய உபயோகப்படுத்தியுள்ள மூலக் கிரந்தங்களின் விதிகளின் திரட்டு.

(Astrological Dogmas employed in Naadi Granthams and Astrological Classics.)

மேஷ லக்கின ஜாதகம்

துவாதச பாவ சகல பலாபலன்கள்

ஆசிரியர் :

C. G. ராஜன், B. A. (Mathematics)

என்னும்

C. கோவிந்த ராஜன், B. A. (Maths)

(Tahsildar and Taluk Magistrate, Retired.)

பப்ளிஷர்:

சி. கனகம்மாள் & கம்பெனி,

(புக்செல்லர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ்)

31, ஆயலூர் முத்தையா முதலி தெரு,

சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை—1

All Rights Reserved to the Author.

முதல் பதிப்பு] 1956 [விலை ரூ.

புத்தக விளம்பரம் 1956-ஞு

A 1883ஞு முதல் 1945-ம்ஞு வரையிலுமுள்ள சென்ற 63 வருஷத்திய கிரகங்களின் கிராந்தி. இது ஜாதக கணிதம் 1-ம் பாகத்தில் கண்டுள்ள அயன பலம் கணிக்க மிகவும் உபயோகமானது. ரூ. **2-0-0**

B 1946-ம் ஞு முதல் 1953-ம் ஞு வரையிலுமுள்ள கிரகங்களின் கிராந்தி. இது மேற்படி அயன பலம் கணிக்க உபயோகமான்து, விலை அணு **0-4-0**

சர்வ முகூர்த்த நிர்ணய விதிகள் என்னும கால விதானம் :— இது சகல வித முகூர்த்தங்களையும் நிர்ணயிக்க மிகவும் உபயோகமானது. இதில் அருமையான பலவித முகூர்த்த விதிகள் அடங்கி இருக்கின்றன. இந்த ஒரு கிரந்தம் இருந்தால் மீதி முகூர்த்த விஷயமான கிரந்தங்கள் தேவை இல்லை. சமஸ்கிருந்தத்திலுள்ள அசலின் தமிழ்மொழி பெயர்ப்பு ஆகும். ஆசிரியர் : சி. ஜி. ராஜன் பி.ஏ., விலை ரூ. **1-10-0**

ஸ்திரி ஜாதகம் :—விருத்தயவனர் சொன்ன ஸ்திரீ ஜாதகம் என்னும் பெண்கள் ஜெனன ஜாதகம் கூடச்சேர்ந்திருக்கின்றது. பெண்கள் ஜாதகம் விஷயமாய் இது ஒரு அருமையான புஸ்தகம். இது பல பூர்வீக மூலக்கிரந்தங்களைத் தழுவி எழுதப்பட்டிருக்கின்றது. இந்த ஒரு புத்தகத்தைப் படித்தால பெண்கள் விஷயமாய் வேறே எந்தப் புத்தகத்தைப் படிக்க வேண்டிய அவசியமில்லை. ஆசிரியர்: சி. ஜி. ராஜன் பி. ஏ., விலை ரூ. **1-8-0**

சுகப் பிரம்ம ரிஷி வாக்கியம் என்னும் ஜாதக சுகர் வாக்கியம் :—முதற் பாகம் இது சுகப்பிரம்ம ரிஷி என்ற சுகர் பரீக்ஷித்து மகா ராஜாவுக்கு உபதேசித்தருளிய ஜோதிட கிரந்தமாகும். இதில் ஒவ்வொரு கிரகமும் பன்னிரண்டு வீடுகளில் இருப்பதால் உண்டாகும் பலன்களும் துவாதச பாவ பலன்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன மேலும் கிரகங்களுக்குள் ஏற்படும் பலன்களைக் கிரக தர்க்கமாக மிகவும் விஸ்தாரமாகக் கொடுத்திருக்கின்றது. இதை அனுசரித்து சுகர் வாக்கியம் என்னும் சுகர் நாடி ஜாதகங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்: சி. ஜி. ராஜன் பி.ஏ., ரூ. **1-6-0**

ஷை **இரண்டாம் பாகம் :**-இதில் சிலயோகங்களும் அவைகளின் பலா பலன்களும், துவாதச பாவ பலன்களும், சில சுகர் வாக்கிய உதாரண ஜாதகங்களும், பன்னிரண்டு லக்கினங்களின் நவாம்சங்களை அனுசரித்து ஜெனன இடத்தின் அமைப்பு, நாட்டுச் சிறப்பு முதலியவைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆசிரியர் : சி. ஜி. ராஜன் பி. ஏ., விலை ரூ. **2-0-0**

ஜோதிட சுய போதினி என்ற முதல் வாசகம் பால போதினி :—இந்தப் புத்தகத்தின் உதவியால் ஜோதிடம் தெரியாத ஒருவர் பிறருடைய உதவியின்றித் தாமே ஜாதகத்தைக் கணிக்கலாம். ஜாதக பலன்களை அறியலாம். தன்னுடைய சொந்த ஜாதகபலன். குடும்ப ஜாதக பலன் முதலியவைகளைச் சுலபமாய் அறியலாம். ஆசிரியர்: சி. ஜி. ராஜன் பி. ஏ., அவர்களால் எழுதப்பட்டுள்ளது. விலை ரூ. **2-8-0**

மேஷ லக்கினம்

(1) **ஜன்ம லக்கினம் :—மேஷம். நாடி அம்சம் :—சாங்கரியாம்சம் :—** ஜன்ம லக்கினம் மேஷம் (சாங்கரியாம்சம்) பூர்வபாகம் ஆகி நான்காம் பாவதியாகிய சந்திரன் தனுசு நவாம்சத்தில் துலாராசியில் இருந்தால் ஜாதகர் நதிப்பிராந்தியத்திலுள்ள பெரிய கிராமம் அல்லது பட்டிணத்தில் தேவாலயத்துடன் கூடிய இடத்தில் ஜனனமும் உத்தர பாகத்தில் வேறுகவும் ஜனனமடைவார்.

(2) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியம்சம் பூர்வம்) ஆகி சனி லக்கின பாவத்தில் இருந்தால் ஜாதகரின் தாய் பிரசவத்தில் அதிக வேதனையடைவாள், உத்தராம்சத்தில் ஜனனமானுல் ஜாதகரின் தாய் அற்ப பீடை யடைவாள் பூர்வ பாகத்தில் ஜனித்தவருக்குப் பத்து நாள் வரை சூதி தோஷபயமுண்டாகும், அல்லது, முப்பது நாள் வரை யுண்டாகும், பாலாரிஷ்டம் அதிகமாக விருக்கும். பாலாரிஷ்டம் சாந்தியாக பாலகிருஷ்ணப் பிரதிமையைத் தானம் செய்தால் பாலரோகம் நிவாரணமாகும், ஜாதகர் ஜீவித்திருந்தால் எழுபது வயதிற் கதிகமாக இருப்பார்.

(3) ஜன்ம லக்கினம் மேஷம் (சாங்கரியம்சம்) ஆகி வைசிய காலத்தில் லக்கின பாவாதிபதியிருந்து வைசிய காலத்தில் பிறந்தவர் வீர சைவ குலத்தில் பாக்கியமுள்ள வமிசத்தில் தெய்வானுக்கிரக முள்ளவராக ஆவார்.

(4) ஜென்மலக்கினம் மேஷம் ஆகி லக்கினபாவாதிபதி மூன்றும் பாவத்தில் குருவுடன் கூடியிருந்தாலும் சந்திரன் கேந்திர திரிகோணத்திலிருந்து சனி மேஷ ராசியில் மைத்திராம்சத்தில் இருந்தால் ஜாதசர் பாலதோஷ நிவாரணமடைவார்

(5) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கினபாவாதிபதி மிதுனராசியில் இருந்து எட்டாம் பாவத்திற்கதிபதியும் அப்படியேயிருந்து ஹோராலக்கினம் உபய ராசியானுல் ஜாதகர் தீர்க்காரம்ப வயதாகிய அறுபத்தொன்பது வயதடைவார்; அல்லது அறுபத் தெட்டாவது அடைவார்,

ஐம்பது வருஷத்தில் அல்லது ஐம்பத்தைந்தில் அபமிருத்து பயமடைவார், சாந்தியால் சுகமடைவார்.

(6) ஜென்மலக்கினம் மேஷம் ஆகிச் சூரியன்கேந்திரத்தில் (கடகராசியில்) சுபருடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவாதிபதி மிதுனத்தில் சந்திரனுக்கு ஒன்பதாமிடத்திலிருந்தால் ஜாதகருடைய தகப்பன் சுகமுடையவர்.

(7) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி சூரியனுக்கு மூன்றாமிடத்தில் கன்னியாராசியில் சுக்கிரனிருந்தால் ஜாதகருடைய தகப்பனார் மூத்த சகோதர ருடையவர், சிவபக்த மதாச்சார முடையவர், வீரசைவ மதானுசரணையுடையவர். ஷை சூரியனுக்கே பத்தாமிடத்தில் சனியிருந்தால் ஜாதகருடைய தகப்பனார் வியாபாரத்தால் சுக மடைவார், வஸ்திர வியாபாரம் செய்பவர், பற்பல வியாபார முடையவர், சகோதரப் பிரபல முடையவர், நியாயமான வழியில் சம்பாதிப்பார், அதனால் பிரசித்தியடைவார், நியாய வாதி, குருவுக்குப் பிரியர், குருவினிடம் அன்புடையவர், ஆஸ்தீகர், ஞான முடையவர், சர்வசாஸ்திரங்களிலும் பிரிய முடையவர், இவர் ஜாதகருடைய மூன்றாந் தசையில் மரணத்தை யடைவார்.

(8) ஜன்மலக்கினம் மேஷம் ஆகி நான்காம் பாவாதிபதியாகிய சந்திரன் துலா ராசியில் தனுசு நவாம்சத்தில் இருந்து லக்கினத்தில் நான்கில் பாபர் (சூரியன்) இருந்தாலும், சந்திரனைக் குரு பார்த்தால் ஜாதகர் தாய்சுக முடையவர், ஜாதகரின் தாய் குணமுடையவள், காலங் கடந்து புத்திரனுடையவள், ஜாதகருடைய மூன்றாந் தெசையில் மரிப்பாள்.

(9) ஜன்மலக்கினம் மேஷம் ஆகி. லக்கினத்திற்கு மூன்றாம் பாவத்தில் செவ்வாயிருந்து சனியால் பார்க்கப் பட்டால், குரு செவ்வாயுடன் கூடியிருந்தால் மட்டும் ஜாதகர் ஒரு சகோதரனும் இரண்டு சகோதரிகளுமுடையவர், மூத்த சகோதரனில்லாதவராவார்.

(10) ஜன்மலக்கினம் மேஷம் ஆகி மாலிகாயோகத்தில் குஜத் திரிம்சாம்சத்தில் பிறந்தவர் வெளுப்பு நிறமுடையவர், ரூப முடையவர், மத்திய தேக முடையவர். வெகு ஆயுளுடையவர், எழுதுவதில் சமர்த்தர், நல்ல அறிவாளி, இதற்கே லக்கினபாவாதிபதி குருவுடன் கூடியிருந்தால் ஜாதகர் விசேஷ சிவபக்தி உடையவர், வீர சைவ மதாச்சார முடையவர், ஜன்மம் முதல் சுக முடையவர், சிவ பூஜைப் பிரியர், தேவப்பிராமணபக்தி யுடையவர், பற்பல வியாபார நிபுணர், சுயார்ஜிதமும் பிதுரார்ஜிதமுமுடையவர், லக்கின பாவத்தில் சனியிருந்தால் கொஞ்சம் அனாசார முடையவர், துராலோசனை செய்பவர், இருபது வயதிற்கு மேல் பிரசித்தியுடையவர், நாற்பது வயதிற்கு மேல் புகழுடையவர், ஆயுள்வரை சுகமுடையவர்.

(11) ஜென்மலக்கினம் மேஷம் ஆகி ஐந்தாம் பாவத்திறகுப் பன்னிரண்டாம் பாவத்தில் கேது இருந்தால் ஜாதகருக்கு சீமந்த சிசு நாச மடையும், பிறகு புத்திரியும் அதன் பிறகு புத்திரனும் ஆக ஒன்றல்ல இரண்டு புத்திரரும் இரண்டு பெண்களும் ஜாதகர் உடையவராவர். இரண்டல்லது மூன்று குழந்தைகள் நாச மடையும், சாந்தியாக ஞாயிறு விரதமும் சந்தான கோபால தானமும் செய்தால் மேற்படி புத்திரி புத்திரர்கள் நிலைப்பார்கள்.

(12) **ஜன்ம லக்கினம்:—மேஷம். நாடி அம்சம்:— பாடலியம்சம்:**—ஜன்ம லக்கினம் மேஷம் (பாடலியம்சம் பூர்வபாகம்) ஆகி துலாராசியில் மீன நவாம்சத்தில் சந்திரனிருந்து விப்பிர காலத்தில் பிறந்த ஜாதகர் சகோதர ஹீனராக பாக்கியமுள்ள சிவபக்த குலத்தில் பெரிய கிராமத்தில் விஷ்ணு ஆலயத்துடன் கூடிய இடத்தில் ஜனனமும், உத்தர பாகத்தில் அக்கிரகாரத்தில் ஜனனமும் அடைவார்.

(13) ஜன்மலக்கினம் மேஷம் (பாடலியம்சம்) ஆகி நான்காவது பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகரின் தாய் பிரசவத்தில் அதிக வேதனை அடைவாள். ஷை நான்காம் பாவத்தைக் குரு பார்த்தால் பாலதோஷபயம் ஐந்து வருஷம் வரையிருப்பினும் முன் புண்ணிய வசத்தால் ஜாதகர் குணமடைவார்.

(14) ஜன்ம லக்கினம் மேஷமாகி லக்கினபாவாதி மைத்திராம்சத்தில் மித்திர(சிம்ம)ராசியிலிருந்து சனிமித்திர க்ஷேத்திரத்தில் (ரிஷப ராசியில்) இருந்தால் ஜாதகர் சகல அரிஷடங்களும் விலகி தீர்க்காயுளாக எழுபத்தைந்து வயதடைவார், அறுபது, அறுபத்தொன்று இந்த வயதுகளில் அபமிருத்து பயமடைவார், அக்காலம் சாந்தியால் சுகமடைவார். ஈசுவர சன்னதியில் லக்ஷமிருத்தியுஞ் ஜெய தானமும் நவக்கிரக சக்கிரதானமும் செய்தால் ஜாதகர் எழுபத்தைந்து வயது வரையில் ஜீவித்திருப்பார்.

(15) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி துலாராசியில் மீன நவாம்சத்தில் சந்திரனிருந்து சூரியன் புத சுக்கிர சந்திரர்களுடன் கூடி ஷ்டி துலா ராசியில் கேந்திர பாவத்தில் இருந்து ஒன்பதாம் பாவாதிபதியாகிய குருவும் நீசராசியிலிருந்தால் ஜாதகருடைய தகப்பனுர் தீர்க வயதுடையவர், சிவ பக்த மதத்தை அடைபவர், அற்ப கல்வியுடையவர், க்ஷேத்திர சுகமும அற்பமுடையவர், வியாபார சுகமுடையவர், பிரபு சினேகிதத்தால் சுகமும் தன் பாலிய வயதில் தரித்திரமும் உடையவர், மத்திய வயதில் சுகமுடையவர், மனைவியிடம் புத்திரன் பிறந்த பிறகு மனைவி வம்சத்தால் சுகமுண்டாகும். ஜாதகருடைய தகப்பனுர் சிக்கிர கோபியாவர், தெளிவான யுத்தியுடையவர், தேவப் பிராமண விசுவாச முடையவர், கொஞ்ச காலம் அனுச் சாரமும் வயோதிக வயதின் கடைசியில் சித்தசுத்தியு முடையவர், மனைவியின் புண்ணியத்தால் புத்திரனுடையவராவார், ஷ்டி சந்திரனுக்கு ஒன்பதாமிடத்தில் கோச் சாரத்தில் சனி வரும் போது ஜாதகருடைய மூன்றுந் தசையில் ஜாதகருடைய தகப்பனுர் மரிப்பார்.

(16) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காவது பாவத்தில் ராகு இருந்து நான்காம் பாவாதிபதி கேந்திர (துலா) ராசியிலிருந்து நவாம்சத்தில் மீனத்தில் இருந்தால் ஜாதகரின் தாய் குண முடையவளாவாள். சுபாம்சத்தில் சுபருடன் ஷ்டி நான்காம் பாவாதிபதிகூடியிருந்தால் ஜாதகரின் தாய், குணமுடையவள், தெய்வானுக்கிரக முடையவள், தாய் வமிசத்தில் சுகமுடையவள். ஜாதகருடைய தாய்ப்பாட்டன் பிரசித்த முடையவர், க்ஷேத்திர பாக்கிய முடையவர், வெளி தேசத்தில் தன சம்பாதனையுடையவர், பாபச் செய்கையுடையவர், முன் ஜன்ம பாப வசத்தினல் சந்ததி யில்லாதவர், தத்து புத்திர சுகமுடையவர், ஜாதகரின் தாய் ஜாதகருடைய இருபத்தைந்தாவது வயதில் மரிப்பாள்.

(17) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி பத்தாம் பாவாதி பதி கேதுவுடன் கூடியிருந்தாலும் பத்தாம் பாவத்தில் கேது இருந்தாலும் ஜாதகர் தன் தாய்க்குக் கர்மம் செய்ய மாட்டார், தகப்பனுக்குக் கர்மம் செய்வார், (கர்மம் என்பது உத்தரகிரியை ஆகும்.)

(18) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி செவ்வாய்க்கு மூன்றுமிடத்தில் சூரியன் நீசராசியிலிருந்து செவ்வாய் பாப நவாம்சத்தில் சிம்மராசியில் இருந்தால் ஜாதகர் சகோதரனில்லாதவர். ஒரே ஒரு சகோதரி சுகவதியாகி இரண்டு புத்திர ருடையவளா யிருப்பாள்.

(19) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி சந்திரன் துலா ராசியில் இருந்து மீன நவாம்சத்திலு மிருந்தால் நீசகேசரி யோகத்தில் சுக்கிர திரிம்சாம்சத்தில் பிறந்த ஜாதகர் வெளுப்பு நிறமும் மெல்லிய ஆகிருதியு முடையவர், சூட்டுத் தேகி, மேதாவி, பித்த தேக முடையவர், ஜன்மம் முதல் சுக முடையவர், தெய்வானுக்கிரக முடையவர், பாலியத்தில் துஷ்ட சுபாவ முடையவர், பன்னிரண்டாம் வயதில் நல்ல அறிவாளியாவார், தாய்ப் பாட்டனுல் சுகமும், தாய்ப்பாட்டனுடைய அன்பும் உடையவர் (நீசகேசரியோகம்:– குரு நீச்சராசியில் சந்திரனுக்குக் கேந்திரத்தில் இருந்தால் நீசகேசரி யோகமாகும்)

(20) ஜென்மலக்கினம் மேஷம் ஆகி, சனி இரண்டாம் பாவத்திலிருந்தால் ஜாதகர் வாச்சாலகர், சாதுரிய யுக்தியுடையவர், திரவிய சம்பாதனையில் சமர்த்தர், தியாகி, கெம்பீர புத்தியுடையவர், பிரபு வசிய முடையவர், பிரபுக்களுக்குப் பிரியமுடையவர், அனுச்சார முடையவராவர்.

(21) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி மூன்றும் பாவாதிபதி துலாராசியில் கேந்திரத்தில் இருந்தால் ஜாதகர் தீரமுடையவர், சூரர் பராக்கிரம முடையவர், விஷய போகத்தில் மனமுடையவர், சந்தன, புஷ்ப, வஸ்திரம் அலங்காரப்பிரியர், சங்கீததப் பிரியர், காமி, பதினாறு வயதில் பிரசித்தியாவார், இருபது அல்லது இருபத்து மூன்றாவது வயதில் வெளி தேசம் செல்வார், பற்பல தேசங்களிலும் பிரபுக்களுடைய சினேகத்தால் சஞ்சார முடையவராகித் திரவிய சம்பாதனையடைவார், இதற்கே ஜென்மலக்கினத்திற்கு இரண்டாம் இடத்தில் பாபர் (சனி) இருந்தால் ஜாதகர் வரவுக்கு மேல் செலவு செய்பவர் ஆவார், மேலும் சர லக்கினங்களில் பிறந்தவர், இப்படிக்கிரகமிருப்பின், எப்போதும் அலைந்து திரிபவராவார், ஜன்ம பூமியை விட்டு வெளி கிராமத்தில் வசிப்பார்.

(22) **ஜன்ம லக்கினம் :—மேஷம். நாடி அம்சம் :— சுதாம்சம் :—** ஜென்ம லக்கினம் மேஷம் (சுதாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி கன்னியா ராசியில் சுமநாம் சத்திலிருந்து நான்காவது காலத்தில் பிறந்தவர் சூத்திர ஜென்மம் உடையவர், சுகமுடையவர், சகோதரமுடையவர், ஆசை உடையவர், விசேஷ சிவ பக்தியுடையவர், பாக்கிய காலத்தில் பிறந்து ஜன்மம் முதல் பாக்கிய முடையவராவார், சமதேக முடையவர், அறிவாளி. சம்பத்துடையவர், கறுப்பு நிறமுடையவர், நல்ல நீதிமுறையுடைவர், பிதுர் பாக்கிய முடையவர், இவரின் தகப்பனுர் கியாதிவாய்ந்தவர், நதிதீரத்திலுள்ள நகரத்தில் தகப்பனுர் யோகமுடையவராயிருக்கும்போது, ஜாதகர் ஜனனமானவராவார்.

(23) ஜன்ம லக்கினம் மேஷம் சுதாம்சம் பூர்வ பாகம் ஆகி லக்கின பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகர் ஜன்ம முதலாக ஐந்து வருஷம் வரையில் பால தோஷ முடையவராவர். ஜாதகர் பிறக்கும் பொழுது ஜாதகரின் தாய்க்குப் பிரசவத்தில் அதிகவேதனையும், உத்திரபாகமானல் பிடையும் உண்டாகும்.

(24) ஜன்ம லக்கினம் மேஷம் சுதாம்ச பூர்வபாகம் ஆகி லக்கினபாவதிபதி கன்னியா ராசியில் சும நாம் சத்திலும் எட்டாம் பாவத்தில் சனிதாராதி சுவஷஷ்டியம் சத்திலும் இருந்தால் ஜாதகர் சகல தோஷங்களும் விலகி அறுபத்தெட்டு வயதடைவார், உத்தர பாகத்தில் பிறந்தவர் எழுபத்துமூன்று வயதடைவார். அறுபத்தொன்று அல்லது அறுபத்திரண்டாவது வயதில் தேக பீடையும் அபமிருத்துவும் ஏற்படும், அக்காலம் மிருத்தியுஞ் ஜெய ஜெபம், கிரக சக்கிரதானம் முதலியவற்றால் தேகாரோக்கிய முன்டாகும்.

(25) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி, குருதிரிம் சாம்சம் ஆகி அதியோகத்தில் பிறந்தவர் கறுப்பு நிறமுடையவர், சமதேகமுடையவர் வாததேகி, ரூபவான், அறிவாளி, அதிருஷ்டசாலி, மேதாவி, கல்வி அறிவுடையவர், தேவப்பிராமணபக்தி யுடையவர், விசேஷ சிவ பக்தியுடையவர், சிவபூஜையில் பிரியமுடையவர், சிவ கைங்கரியங்களுக்குத் தர்மம் செய்பவராவார்.(அதியோகம்:- லக்கினத்திற்காவது சந்திரனுக்காவது ஆறு, ஏழு, எட்டாவது பாவங்களில் சுபக்கிரகங்கள் இருந்தால் அதியோகம் உண்டாகும். இவ்விதமாக லக்கினத்திற்கு இருந்தால் லக்கினதி யோகமாகும், சந்திரனுக்கு இவ்விதமாக விருந்தால் சந்திராதியோக மாகும்.

(26) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கின கேந்திரத்தில் ராகு இருந்தால் ஜாதகர் லோபகுணமுடையவர், ஆஸ்தைகயுடையவர், அறிவாளி, வைதிகாசார தர்ம மறிவார், பிரபு வசிய முடையவர், எல்லோருக்கும் சம்மதமானவர், ஊகிக்கவும், தள்ளி விடவும் தெரிந்தவர், கர்ப்ப ஸ்ரீ மான், விசேஷ தன முடையவ ராவார்.

(27) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கின பாவாதிபதி சுக்கரனுடன் கூடியிருந்து கன்னியாராசியில் இருந்தால் ஜாதகர் பாக்கியமுடையவ ராவார்.

(28) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி எட்டாம் பாவாதிபதி ஆறாவது பாவத்திலிருந்து, ஆறாவது பாவாதி

பதி எட்டாவது பாவத்திலிருந்தால் மேற்படி கிரகங்கள் ஒருவருக்கொவர் க்ஷேத்திர பரிவர்த்தனையால் ஜாதகர் விசேஷ யோக மடைவார், மகா பாக்கிய முடையவராவார்

(29) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி சந்திரன் லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் வர்க்கோத்தமத்தி லிருந்தால் ஜாதகர் நல்ல பாக்கிய முடையவ ராவார்.

(30) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி பத்தாம் பாவாதிபதி சூரியனுடன் கூடி விருச்கிக ராசியி லிருந் தால் ஜாதகர் வஸ்திர வியாபாரத்தால் ஜீவிப்பார்.

31) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி ஐந்தாம் பாவாதிபதி சனியுடன் கூடி விருச்சிக ராசியிலும் குரு கேதுவுடன் கூடி துலா ராசியிலும் இருந்து ஐந்தாம் பாவும் மேற்படி சனியால் பார்க்கப் பட்டால் ஜாதகர் சந்தானத் தடை யுடையவராவர். மேற்படி தோஷ நிவர்த்தி யாக ஹரி வாஸர தினத்தில் கோதானம் செய்து சேது ஸ்தானம் முதலியனவும் பாலமுகுந்த தானமும் செய்தால் ஜாதகருக்குக் காலாந்திரத்தில் அற்பசந்தான முண்டா கும், ஷை தானத்தை வஸ்திரத்துடன் கூடிய சொர்ண பால கிருஷ்ணப் பிரதிமை ஜோதிஷருக்குக் காரணத் தைச் சொல்லித் தானம் செய்ய வேண்டும்.

(32) **ஜன்ம லக்கினம்:-- மேஷம், நாடி அம்சம், கணேசாம்சம் :—** ஜன்மலக்கினம் மேஷம் (கணேசாம்சம்) பூர்வபாகம் ஆகி லக்கினபாவத்தில் சுக்கிரனுடன் சந்திரன் கூடி யிருந்தால் ஜாதகரின் தாய் பிரசவத்தில் அற்ப வேதனை யடைவாள், அப்பொழுது செவ்வாயால் சந்திர சுக்கிரர்கள் பார்க்கப்பட்டால் ஜாதகருடைய தாய்க்குத் தோஷமும் ஜாதகருக்குப் பாலதோஷ பயமும் உண் டாகும், ஷை சந்திரன் நீசாம்சத்தில் இருந்தால் பால தோஷமானது ஆறு வருஷம் வரையில் ஏற்படும்.

(33) ஜன்ம லக்கினம் மேஷம் அகி குருகேந்திர திரி கோணத்திலிருந்து லக்கின பாவாதிபதி தன் உச்சராசி யிலிருந்து ராகு பதினோராவது பாவத்திலிருந்தால் ஜாதகர் பாலதோஷம் நீங்கிச் சுகமடைவார், எழுபத்தைந்து வயது

தீர்க்காயு ளடைவார், அறுபத்திரண்டாவது வயதில் தேக ஜாட்டியமடைவார், அக்காலம் மிருத்தியுஞ்ஜெய ஜெப மும் ஆயுள் ஹோமமும் செய்தால் அபமிருத்து நீங்கி எழுபத்தைந்து வயது வரையிலும் சுகமாயிருப்பார்.

(34) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாவது பாவாதிபதி தன் உச்சராசியி லிருந்து, சூரியன் ரிஷப ராசியில் மஞ்சுஸ்வநாம்சத்தில் இருந்தால் ஜாதகருடைய தகப்பனார் தீர்க்காயு ளடைவார், சிவபக்தியுடையவர், வியாபாரத்தினுல் ஜீவனமுடையவர், பிரசித்தியுடையவர், மத்திய வயதில் சூத்திரப்பிரபுவால் ஜீவனமுடையவர், பிரபல வியாபாரமுடையவர், திரவிய சம்பாதனையில் சமர்த்தர், தேவப்பிராம்மண விசுவாசமுடையவர், பற்பல சாஸ்திரத்தில் ஆராய்ச்சி யுடையவர், சர்வ சாஸ்திரப் பிரியர், தேவையான வற்றை அறிபவர், குணமுடையவர், தேவத் திரவியத்தாலும் ஜீவிப்பவர், வயோதிக வயதில் அற்ப சுகமுடையவர், ஜாதகருடைய ஐந்தாந் திசையில் ஜாதகருடைய தகப்பனார் மரிப்பார்

(35) ஜன்மலக்கினம் மேஷம் ஆகிச் சந்திரன் லக்கின கேந்திரத்திலிருந்து குரு நான்காம்பாவத்தி லிருந்தால் சந் திரன் நீச நவாம்சத்தி லிருந்தாலும் ஜாதகர் தாய்சுக முடையவர், இவருடைய தாய் சுத்தம் நற்குணம் முதலி யன உடையவள், பதிபக்தி யுடையவள், அன்னதானம் செய்வதில் பிரியமுடையவள், ஜாதகருடைய ராகு தெசையில் இவள் சுமங்கிலியாகவே மரிப்பாள்.

(36) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய புதன், சனி சூரிய னிவர்களுடன் சம்மந் தப்பட்டிருந்து, செவ்வாய் தன் உச்சராசியி லிருந்தால் ஜாதகர் சகோதரசுக மற்பமா யுடையவர், ஜாதகருடைய சகோதரன் அற்பாயு ளடைவர், ஆயுளுள்ள இரண்டு சகோதரிகளுடையவர், அதிகம் சகோதரிகள் பிறந்தாலும் மரித்து விடுவார்கள்.

(37) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி குஜத் திரிம்சாம் சத்தில் ருசக யோகத்தில் பிறந்தவர் கறுப்பு நிறமுடை

யவர், சமதேகி; தெளிந்த மனமுடையவர், தேவப் பிராமண பக்தி யுடையவர், சிவபக்தி மதாச்சார முடையவர், பிதிர் பாக்கிய முடையவர், மத்திய வயதில் பிரசித்தி யுடையவர், வியாபாரத்தினால் ஜீவனமுடையவர், பற்பல வியாபாரத்திலும் சமர்த்தர், எழுதுவதில் சமர்த்தராவர். (ருசகயோகம்:—அங்காரகன் அதிக பலமுடையவராகி மூலத் திரிகோணம், ஆட்சி உச்சம், இந்த ராசிகளில் கேந்திர பாவத்தில் இருப்பதால் ஏற்படும் ஒருவித ராஜ யோகமாகும்,இது பஞ்சமகா புருஷயோகத்தில் ஒன்றாகும்.)

(38) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி ஏழாம் பாவாதிபதி லக்கின கேந்திரத்தில் இருந்து இரண்டாம் பாவத்தில் பாபர்கள் இருந்தால் ஜாதகர் மறு மனைவி யுடையவர், முதல் மனைவி புத்திரனில்லாதவள், ஒரு புத்திரியுடையவளாவள், இரண்டாம் மனைவியிடம் ஜாதகர் புத்திரனுடையவராவர்.

(39) **ஜன்ம லக்கினம், மேஷம், நாடி அம்சம் சுதாம்சம்:—** ஜன்ம லக்கினம் மேஷம் (சுதாம்சம்) ஆகி லக்கினத்திற்கு மூன்றாம் பாவத்தில் சனியிருந்து மித்திர க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகர் உடன் பிறந்த சகோதர ருடையவராக சிவக்ஷேத்திரத்தில் சிவ பக்த குலத்தில் பந்துக்களின் வீட்டில் அல்லது தாய் வீட்டில் ஜனன மடைவர். அதிகம் பிதுரு சுகமும், மாதுரு சுகம் சொற்பமு முடையவர், ஜாதகர் பிறக்கும் பொழுது இவருடைய தகப்பனார் தரித்திர முடையவர், ஜாதகர் மூத்த சகோதரனிடம் அற்ப நட்புடையவர், ஜாதகர் சுகமுடையவர், சிவகைங்கரியம் செய்பவர், மிதமான பாக்கிய முடையவர், சகோதரி ஒருத்தி அற்ப காலம் ஜீவிப்பவள், அல்லது வேசிக்குச் சமமானவளாவள்; ஜாதகர் வெளுப்பு நிறமுடையவர், கல்வி யுடையவர், புத்திமான், சிவபக்தி யுடையவர், சிவபூஜை செய்பவர், தன் பாலியத்தில் மிதமான பாக்கிய முடையவர், முப்பது வயதிற்குமேல் சுக முடையவர், பாலியத்தில் ஐந்தல்லது ஆறாவது வயதில் அக்ஷரஞான முடையவர், ஜாதகர் வாச்சாலகர், சாதுரிய

யுக்தியுடையவர், உபாயத்தினால் காரிய சாதனை செய்பவர், தேவப் பிராமண விசுவாசி, தன் ஜனங்களாலும் கௌரவிக்கப் படுபவர், பரோபகாரமுடையவர், சாஸ்திர ஞான முடையவர்; இருபது வயது முதல் பிரசித்தியடைந்து ஆயுள்வரை சுகியாகி பூர்ணாயுளுடையவராவார்.

(40) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி மிதுன ராசியில் சனி ஜன்ம காலத்தில் இருந்து பிறகு இன்னம் ஆறு மாதம் அங்கு இருப்பதாகவும் மற்ற மீதி முன்பே சென்று விட்டதாகவும் பாவித்துக் கொண்டு ஜனன காலம் முதல் துடர்ச்சியாக ஒவ்வொரு பரியாயத்திலும் (சுற்றிலும்) சனி ஒவ்வொரு ராசியிலும் இருக்கும் பொழுது நடக்கும் பலனை இனி மேல் சொல்லப்படுகிறது.

பொது

(41) ஒரு கிரகம் ஜனனகாலத்தில் தான் இருக்கின்ற ராசி முதல் பன்னிரண்டு ராசிகள் அடங்கிய ஒரு மண்டலத்தைச் சுற்றி வருவதற்குச் செல்லுகின்ற மொத்த காலம் ஒரு பரியாயம் ஆகும். அஃதாவது ஒரு கிரகம் ஜாதகருடைய ஜனனகாலத்தில் எந்த ராசியில் எவ்விடத்தில் (எந்தஸ்புடத்துடன்) இருக்கிறதோ அதே ராசியில் அதே இடத்தில் (அதே ஸ்புடத்தைப் பன்னிரண்டு ராசிகளையும் சுற்றிய பிறகு அடைந்து) திரும்பவும் வருகின்றதற்குச் செல்லுகின்ற காலம் ஒரு பரியாயமாகும். சனிக்கு ஒரு பரியாயம் என்பது சுமார் முப்பது வருஷகாலம் ஆகும். முதலாவது சுற்றிற்கு முதலாவது பரியாயம் என்றும் இரண்டாவது சுற்றிற்கு இரண்டாவது பரியாயம் என்றும், மூன்றாவது சுற்றிற்கு மூன்றாவது பரியாயம் என்றும், நான்காவது சுற்றிற்கு நான்காவது பரியாயம் என்றும் சொல்லப்படும். முதல் பரியாயம் பிறந்தது முதல் சுமார் முப்பது வருஷமாகும், இரண்டாவது பரியாயம் சுமார் முப்பது வயது முதல் அறுபது வயது வரையிலும் ஆகும். மூன்றாவது பரியாயம் சுமார் அறுபது வயது முதல் சுமார் தொண்ணூறு வயது வரையிலும் ஆகும். நான்

காவது பரியாயம் சுமார் தொண்ணூறு வயது முதல் சுமார் நூற்றிருபது வயது வரையிலும் ஆகும்.

(42) ஜன்மலக்கினம் மேஷமாகிச் சனி ஜனன காலத்தில் மிதுன ராசியில் இருந்தால் இவர் இந்த மிதுன ராசியில் இருக்கும் வரை ஒராவது பரியாயத்தில் ஜாதகர் பாலரோகப் பீடையை யடைவார்.

(43) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி ஜன்ம காலத்தில் சனி நின்ற ராசி மிதுன ராசி ஆகி அங்கு ஒராவது பரியாயத்தில் சனி சஞ்சரிக்கும் போது சொல்லப் பட்ட பலனே கடக ராசியிலும் சனி சஞ்சரிக்கும் பொழுதும் நடக்கும். இந்த இரண்டு ராசிகளிலும் ஜாதகருக்குப் பலன் அற்பமாகவே நடக்கும், அல்லது மத்திய பலனே யுண்டாகும்.

(44) ஜன்மலக்கினம் மேஷம் ஆகி சனி நின்ற ராசி மிதுன ராசி ஆகி அதற்கு மூன்றுமிடமான சிம்ம ராசியில் சனி ஒராவது பரியாயத்தில் கோச்சாரத்தில் சஞ்சார காலத்தில் விசேஷ கஷ்ட பலனுண்டாகும், அங்கு (சிம்ம ராசியில்) (சனியின்) அஷ்டவர்கத்தில் பரல்களும் ஒன்றல்லது இரண்டு அல்லது மூன்று வரையிலிருந்தால் ஷை கஷ்ட பலனே ஏற்படும்.

(45) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி, ஜன்ம காலத்தில் சனி நின்ற ராசி மிதுன மாகி அதற்கு நான் காமிடமான கன்னியா ராசியில் ஒராவது பரியாயத்தில் கோச்சாரத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் (அங்கு சனியின் அஷ்டவர்க்கத்தில் ஏழு பரல்களு மிருந்தால்) ஜாதகர் தேக சுகமும் தாய் தகப்பன் சுகமும், ஜனனமானதி லிருந்து பத்து வருஷம் வரையிலும் சமமாகவே விருக்கும்.

(46) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஜன்ம காலத்தில் சனி நின்ற ராசி மிதுனமாகி அதற்கு ஐந்தாமிடமான துலா ராசியில் ஒராவது பரியாயத்தில் கோச்சாரத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் ஜாதகருடைய தாய் மரிப்பாள், அல்லது நோயை யடைவாள்.

(47) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி ஜன்ம காலத்தில் சனி நின்ற ராசி மிதுன ராசி ஆகி அதற்காறு மிடமான விருச்சிக ராசியில் சனி ஒராவது பரியாயத்தில் சஞ்சரிக்கும் போது ஜாதகருடைய தாய் மரிப்பாள் என்று சிலர் எண்ணுகின்றனர், அப்போது மாரக தசையும் நடந்து, லக்கினத்திற்குப் பதினோராம் பாவாதிபதி* இருக்கும் நவாம்ச ராசித் திரிகோணத்தில் கோச்சாரத்தில் சனி சஞ்சாரஞ் செய்தால் தாய் மரணம் நிச்சயமாக நடக்கும், ஜாதகர் மித்திரனால் கிலேச மடைவார்.

*குறிப்பு:—மாதுர் லக்கினம் நான்காவது பாவமுமாகும். இதற்கு எட்டாம் பாவம் லக்கினத்திற்குப் பதினோராவது பாவம் ஆகும். ஒரு பாவத்திற்கு எட்டாவது பாவாதிபதி இருக்கின்ற நவாம்ச ராசியின் திரிகோண ராசியில் சனி கோட்சாரரத்தில் சஞ்சாரம் செய்யும் பொழுது அந்தப் பாவத்தினால் குறிப்பிடப்பட்டவருக்கு மரணம் நேரிடும் ஆகையால் இங்கு தாய் மரணம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

(48) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி ஜன்ம காலம் சனி நின்ற ராசி மிதுன ராசி ஆகி சந்திரனுக்கு ஏழாமிடத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் ஜாதகருக்குச் சமமான ஜனங்கள் அவதியடைவார்கள்.

(49) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி ஜன்ம காலத்தில் மிதுனத்தில் சனி நின்று விருச்சிக ராசியில் சனி கோச்சாரத்தில் வரும்போது ஒராவது பரியாயத்தில் விசேஷ கஷ்டமும் ஸ்தான நாசமும் மனோபயமும் வேதனையும் கலகத்தால் மனோவேதனையும் ஏற்படும், மேலும் தனுசு மகரம் இவ்விரண்டு ராசிகளிலும் சனி சஞ்சரிக்கும் பொழுது கூட இதே பலன்தான் நடக்கும்.

(50 ஜன[illegible]னம் மேஷம் ஆகி, ஜன்ம காலத்தில், சனி நின்ற ராசி மிதுன மாகி மு[illegible]ராசியில் சனி கோச்சாரத்தில் வரும்போது ஒராவது பரியாயத்[illegible] சுயார்ஜித சொத்தை அடைவார், பிரபலமாக ஆவா[illegible], மிதுனம் முதல் மகரம் வரையில் ரேகாயோக பலனுண்டா

கும். கும்பராசி முதலாக ஒராவது பரியாயத்தில் ஜாதகர் நற்பலனடைவர்.

(51) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி ஜன்மகாலத்தில் மிதுன ராசியில் சனி நின்று மீன ராசியில் ஒராவது பரியாயத்தில் கோச்சாரத்தில் சனி வரும் பொழுது ஜாதகருக்குச் சூத்திர வியாபாரப் பிரபுவால் சுக முண்டாகும், தனம் சுயார்ஜிதம் சம்பாதித்து ஜீவனம் செய்வார், மீனராசியின் கடைசியில் சனி வரும் போது ஜாதகர் விவாகம் அடைவார். விவாகமானபின்பு இவர் பிரபலமடைவார்.

(52) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிச் சனி நின்ற ராசி மிதுன ராசி ஆகி ஒராம் பரியாயத்தில் மேஷ ராசியில் சனி வரும்போது ஜாதகருக்கு வியாபாரியான பிரபுவின் சினேக முண்டாகும்.

(53) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி மிதுன ராசியிலிருந்து புரப்பட்டு சனி ரிஷப ராசியில் ஒராவது பரியாயத்தில் வரும்போது ஜாதகருக்குத் தேக பீடையுண்டாகும், ஜாதகருக்கு இவருடைய இருபத்தேழாவது வயதில் சுகமும் இருபத்தெட்டாவது வயதில் பயமும் உண்டாகும். சாந்தி செய்தால் அக்காலம் இவர் சுகமடைவார், முப்பது வயது வரையில் (மத்திம பலன் நடைபெறும்.) கல்வி கற்பார்.

(54) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிச் சனி மிதுன ராசியில் ஜன்ம காலத்தில் வர்கோத்த மாம்சத்தில் இருந்து ஒரு பரியாயம் பூராவும் பன்னிரண்டு ராசிகளிலும் சஞ்சரித்து விட்டுத்திரும்பவும் இரண்டாவது பரியாயத்தில்ஜன்மகாலத்தில்நின்ற ராசியில் வந்த பிறகு ஜாதகர் இந்த இரண்டாம் பரியாயத்தில் அற்பசுகம் அடைவர், மேலும்.

(55) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி இரண்டாம் பரியா[illegible] யத்தில் மிதுனத்தில் சனி இருக்கும் [illegible] இரண்டாம் பரியாயத்தில் ஜாதகர் [illegible] சுகமும் மிதுனத்திலேயே [illegible] தனையும் தேகாரோக்கியமும் அடை[illegible]ரபு சினேகமும் பிரசித்தியும் சகோதரனுடன் கலகமும் பாகப் பிரிவும் அடைவார், அப்படியில்லாவிடில் சகோதர வர்க்கத்தில் நிச்சயமாய்க் கெடுதலுண்டாகும்.

(56) ஜன்ம காலத்தில் சந்திரன் மேஷராசியில் மிதுன நவாம்சத்திலிருந்து இரண்டாம் பரியாயத்தில் சந்திரன் நின்ற ராசிக்கு மூன்றுமிடத்தில் சனி வந்தால் ஜாதகர் தனதான்னிய விர்த்தியடைவார்.

(57) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி கடக ராசியில் இரண்டாம் பரியாயத்தில் சனி வந்தால் சுபமே ஜாதகருக்குப் பலனுக நடந்தாலும், ஜாதகருடைய உறவினர் வர்க்கத்தில் அரிஷ்டம் நேரும், தாய்வர்க்கத்தில் விசேஷ முண்டாகும், ஜாதகர் ஒரோர் சமயம் கொஞ்சம் கொஞ்சம் தன மடைவார்.

(58) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி இரண்டாம் பரியாயத்தில் சிம்ம ராசியில் சனி வந்தால் ஜாதகர் அற்பமான தனம் மாதுரு வர்க்கத்தால் அடைந்தாலும், கல்வியால் பிரசித்தி யடைவார்,

(59) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி இரண்டாம் பரியாயத்தில் கன்னியா ராசியில் சனி வந்தால் ஜாதகர் பெண்சந்ததி யடைவார், தன லாப முடையவ ராவர், சிம்ம ராசியில் இதற்கு முன் அற்பபல னடைந்தாலும் கன்னியா ராசியில் சந்தேகமின்றித் தனமும் அடைவார், தாயாதி வர்க்கத்தில் அரிஷ்டமும் வெகு கலகமும் அடைவார்.

(60) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிச் சனி இரண்டாம் பரியாயத்தில், துலாராசியில் வரும்போது ஜாதகர் தன சம்பாதனை யடைவார், ஆயினும் கொஞ்சம் தேக பீடை யடைவார், மனைவிவம்சத்தில் அரிஷ்டம் நேரும், மனைவிக்கும் அற்ப பீடை யுண்டாகும், இந்த துலாராசியின் அந்தியத்தில் பிதுரு நாசமேற்படும் அல்லது அடுத்த விருச்சிக ராசியில் சனி வரும்பொழுது நேரிடும்.

(61) ஜன்ம லக்கினம் மேஷமாகிச் சனி இரண்டாம் பரியாயத்தில் விருச்சிக ராசியில் வரும்போது ஜாதகருடைய தகப்பன் மரண மடைவாரென்று சிலர் எண்ணுகின்றனர், ஜாதகர் பிரபு சினேகமடைவார், தனலாப முடையவ ராவார்.

(62) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிச் சந்திரன் நின்ற ராசிக்கு ஒன்பதாமிடத்தில் இரண்டாம் பரியாயத்தில் சனி கோச்சாரத்தில் வந்தால் ஜாதகர் மிதமான பாக்கிய மடைவார்.

(63) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிச் சனி இரண்டாம் பரியாயத்தில் மகர ராசியில் சனி கோச்சாரத்தில் வந்தால் ஜாதகர் அற்ப சுகமும் புத்திர பாவத்தினால் விசாரமு மடைவார்.

(64) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிக் கும்ப ராசியில் கோச்சாரத்தில் இரண்டாம் பரியாயத்தில் சனி வந்தால் ஜாதகர் விசேஷ சுகமும் அல்ப லாபமும் பிரசித்தியு மடைவார், இவருக்குப் புத்திர பலனு முண்டாகும்.

(65) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி மீன ராசியில் கோச்சாரத்தில் இரண்டாம் பரியாயத்தில் சனி வந்தாலும், மேஷராசியில் இரண்டாம் பரியாயத்தில் வந்தாலும் ஜாதகருக்கு வரவுக்கு மேல் செலவும் தேக பீடையும் தனக்குச் சமானமான வர்களுக்குப் பீடையும் உண்டாகும்.

(66) ஜன்ம கால லக்கினம் மேஷமாகி ரிஷப ராசியில் இரண்டாம் பரியாயத்தில் சனி வரும்போது சுபாசுபங்கள் கலந்தும் சனி சாரத்தின் பலனாக நேரிடும்.

(67) ஜன்ம லக்கினம் மேஷமாகி மூன்றாவது பரியாயத்தில் சனி கோச்சாரத்தில் சந்திரனுக்கு மூன்றாமிடத்தில் வரும்போது (ஓராவது ரசியில் அதற்கு முன்பே இருந்தபோழுது அற்ப சுகமும் இரண்டாமிடத்தில் இருந்தபோழுது மிக்க சுகமும் உண்டான பிறகு) ஷை மூன்றாமிடத்தில் சனி வர்க்கோத்தமாம்சத்தில் இருந்தால் வயோதிக வயதில் ஜாதகர் சம்பத்தை அடைவார், சகோதரனுடன் மனஸ்தாபமுண்டாகும் அல்லது சுயக்ஷேத்திரத்தில், லக்கினத்திற்கு லாப பாவமான பதினோராமிடத்தில் இருந்தாலும் சம்பத்தும் மேற்படி மனஸ்தாபமு மேற்படும்.

(68) ஜன்ம காலம் சத்திரனிருக்கும் ராசி முதலாக ஐந்தாவது ஆறாவது இடங்களில் சனி கோச்சாரத்தில்

இருந்தால் ஐந்தாமிடத்தில் இருக்குபொழுது தேகஜாட்டியமும் ஆறாமிடத்தில் இருக்கும் பொழுது விஷேசுகமும் நேரிடும், ஏழா மிராசியில் கோசரத்தில் சனி இருக்கும் பொழுது மனைவி நாசமும், எட்டாமிடத்தில் சனி இருக்கும் பொழுது தேக பீடையும் ஒன்பதாமிடத்தில் சனி இருக்கும்பொழுது மரணமும் நேரிடும், அந்தியத்தில் ஜாதகர் நல்ல ஞான மடைவார்.

(69) ஜன்ம லக்கினம் சரமாகிய மேஷம் ஆகி பாக்கி யாம்சத்தில் சுக்கிரன் பதினோராம் பாவத்திலிருந்து சனியுடன் கூடியிருந்தாலும் சனியால் பார்க்கப் பட்டாலும் ஜாதகர் மத்திய வயதில் தனமடைவார், பாலிய வயதில் அற்ப சுகமுடையவர், இருபது வயது வரையில் அற்ப சுகியே ஆவார். அதற்கு மேல் பாக்கியயோகமும் முப்பது வயதிற்கு மேல் நல்ல யோகமும் அடைந்து, நாடக அலங்கார, காவிய, சங்கீதப் பிரியராவர், காமீயாவர்.

(70) ஜன்ம லக்கினம். சரமாகிய மேஷம் ஆகி சுக்கரன் பாக்கியாம்சத்தில் பதினோராவது பாவத்தில் இருந்தால் ஜாதகர் போக ஸ்திரி சுகமுடையவ ராவர், பற் பல ஸ்தீரிகளையும் சேர்வார், ராஜயோக விருத்தியுடையவ ராவர்.

(71) **ஜன்மலக்கினம்:-மேஷம். நாடி·அம்சம்:-ஸ்ருக்வினியம்சம்:**-ஜன்ம லக்கினம் மேஷம் (ஸ்ருக்வினியம்சம்) ஆகி, லக்கின பாவாதிபதி நீச்ச ராசியிலிருந்து லக்கினம் சுக்கிரனால் பார்க்கப்பட்டால் ஜாதகர் வனப்பிராந்திய மிதகிராமத்தில் பூர்வ பாகமானால் கிழக்கு மேற்கு வீதியில் ஜனனமும், உத்திராம்சத்தில் வடக்குத் தெற்கு வீதியில் ஜனனமு மடைவார்.

(72) ஜன்ம லக்கினம் மேஷம் ஸ்ருக்வினியம்சம் பூர்வபாகம் ஆகி லக்கின பாவாதிபதி நான்காம் பாவத்திலும், சந்திரன் சுக்கிரனுடன் கூடி ஏழாம் பாவத்திலு மிருந்தால் ஜாதகருடைய தாய் பிரசவத்தில் அற்ப வேதனையுடையவள், உத்தரபாகத்தில் பிறந்தால்

அதிக வேதனையும் சூதிதோஷ பயமும் உண்டாகும். ஜாதகருக்கு ஜன்ம திசையில் கொஞ்சம் பாலாரிஷ்ட பய முண்டாகும், சிசுக்களுக்குறிய மாந்த ஜுரம் ரிணம் முதலியன உண்டாகும்.

(73) ஜன்ம லக்கினம் மேஷம் ஸ்ருக்வினியம்சம் பூர்வபாகம் ஆகி லக்கின பாவாதிபதி நீச்சராசியில் தன் உச்சாம்சத்தில் பலத்துடனிருந்து சுக்கிரன் கேந்திர திரிகோணத்தில் இருந்தால் ஜாதகர் சகல தோஷங்களும் விலகி அறுபத்தைந்து வயதடைவார், உத்தர பாகத்தில் பிறந்தவர் அறுபத்தெட்டு வயதடைவார்.

(74) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிச் சூரியன் குருவுடன் கூடி ஆறும் பாவத்திலிருந்து அங்கு ஒன்பதாம் பாவாதிபதியும் கூடியிருந்தால் ஜாதகருடைய தகப்பனர் சுகமுடையவர், வைஷ்ணவ ஆச்சார முடையவர், தேவப்பிராமணபக்தி யுடையவர், அரசாங்கப் பிரசித்தி யுடையவர், உத்தியோக ஜீவனமுடையவர், திரவிய சம்பாதனையில் சமர்த்தர், அற்ப க்ஷேத்திர முடையவர், இவர் ஜாதகருடைய ஜன்ம திசையில் மரிப்பார்.

(75) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம் பாவாதிபதி சுக்கிரனுடன் கூடி ஏழாம் பாவத்திலிருந்தால், நான்காம் பாவத்தில் செவ்வா யிருந்தாலும், ஜாதகருடைய தாய் சுகமுடையவள், நற்குணவதியாவள், சுத்தமான மனமுடையவளாவள், பதிவிரதையாவள், முன்பாபவத்தினல் விதவையாய்த் துக்கிப்பவளாவள்.

(76) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி மூன்றும் பாவாதிபதி தன் உச்சராசியில் ஆறும் பாவத்தில் குருவுடன் கூடியிருந்தால் ஜாதகர் பின் சகோதரனுடையவராயினும் ஆயுளுள்ள ஒரு முத்தசகோதரனுமுடையவராவர், ஜாதகருக்கு நால்வர் அல்லது ஐவர் இளைய சகோதரரிருப்பார்கள், முன் பின் சகோதர லக்ஷணமிப்படி இருப்பினும் ஜாதகர்ஸ்திரி சகோதரிகளு முடையவராவர்.

(77) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிப் பாஸ்கரயோக ஜாதகத்தில் குருத் திரிம்சாம்சத்தில் பிறந்த ஜாதகர் கறுப்பு நிறமுடையவர், பித்த சுவாப முடையவர், பித்த தேகமுடையவர், சூட்டுத்தேகமுடையவர், நல்ல அறிவுடையவர், புகழுடையவர், சமர்த்தர், பாலியத்தில் மந்தபுத்தியுடையவர், இருபது வயதிற்கு மேல் பிரசித்தராவார், எழுதுவதிலும் வாச்சாலக யுக்தியிலும் சேர்ப்பதிலும் கலைப்பதிலும் சமர்த்தராவர்.

(78) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிக் குருவும் ராகுவும் கூடி ஆறும்பாவத்தி லிருந்தால் ஜாதகர் துராலோசனை செய்பவராவர், மனச் சஞ்சல முடையவராவர், பதினெட்டு வயது முதல் பிரசித்தியுடையவர்’ சுயப்பிரபலமுடையவர், விஷே விஷ்ணு பக்தியுடையவர், உத்தியோக ஜீவன முடையவராவர், கல்வியறிவுடைய விவேகியாவர், பிரபு வசிய முடையவராவர்.

(79) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி ஐந்தாம் பாவாதிபதி குரு ராகு இவர்களுடன் கூடி ஆறும் பாவத்தில் இருந்தால் ஜாதகர் அற்ப சந்தான முடையவராவர், அதிக ஸ்திரி பிரஜைக ளுடையவர், இரண்டு புத்திரரும் நான்கு புத்திரிகளு முடையவராவர்.

(80) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பது பத்திற் குடையவர்கள் கூடியிருந்தால் இவர்களுடைய திசையில் ஜாதகர் பிரபலமடைவார்.

(81) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிச் சனியும் கேதுவும் கூடியிருந்தாலும், ஒருவரையொருவர் பார்த்லும் ஜாதகர் சஞ்சல முடையவராவர், விஷ்ணு பக்தியுடைவர், பதினெட்டு வயது முதல் பிரசித்தியுடையவர், சுயப்பிரபல முடையவர், உத்தியோக ஜீவன முடையவர், பிரபு வசிய முடையவ ராவர்.

(82) **ஜன்மலக்கினம்:-மேஷம், நாடி அம்சம்:-குந்தாம்சம்.** ஜன்ம லக்கினம் மேஷம் (குந்தாம்சம்) பூர்வபாகம் ஆகி லக்கின பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் விப்பிரகாலத்தில் இருந்தால் ஜாதகர் நதிப்பிராந்தியத்தில் சிறிய

கிராமத்திலும், உத்திர பாகத்தில் பெரிய கிராமத்திலும் ஜனன மடைவார், சகோதர சகோதரிக ளுடையவராவர்.

(83) ஜன்ம லக்கினம் மேஷம் (குந்தாம்சம்) பூர்வ பாகம் ஆகி லக்கின பாவாதிபதி கேதுவுடன் கூடி ஒன்ப தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகருடைய தாய் பிரச வத்தில் அதிக வேதனையை யடைவாள்.

(84) ஜன்ம லக்கினம் மேஷம் குந்தாம்சம் உத்தர பாகம் ஆகி சந்திரன் ராகுவுடன் கூடி மூன்றும் பாவத் தில் இருந்தால் ஜாதகருடைய தாய்க்குச் சூதிதோஷ பயமும்' ஜாதகருக்குப் பாலரோக பயமும் உண்டாகும்.

(85) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி ஐந்தாம் பாவத் தில் சூரியனிருந்தால், ஜாதகர் பாலரோக பயமும் மாந்த ஜுரம் முதலான பாதையும் அடைவார், அப்போது ஐந்தாம் பாவத்திற்குக் குரு திருஷ்டியிருந்தால் ஜாதகர் சுகத்தை அடைவார்.

(86) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்று எட்டு ஆகிய இவைகளுக்குடைய பாவாதிபதி கேந்திர திரி கோணத்தில் இருந்து பத்தாம் பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் இருந்து, குரு பதினோராம் பாவத்திலும் இருந் தால் ஜாதகர் சகல தோஷங்களும் விலகி அறுபத் தொன்பது வயதடைவார், அல்லது எழுபது வயதடைவார். முப்பத்திரண்டு நாற்பத்திரண்டு வயதுகள் ஆகிய இக் காலங்களில் ஜாதகர் தேக பீடையும், ஐம்பத்தாறில் அபமிருத்து பயமும் அடைவார், அக்காலங்களில் மிருத் துஞ்ஜெய ஜபம் சனிக்கிரதானம் முதலிய செய்து சாந்தி செய்தால் அபமிருத்து விலகி ஜாதகர் சுகமடைவார்.

(87) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிச் சூரியன் சுய க்ஷேத்திரத்திலிருந்து ஒன்பதாம் பாவாதிபதி பதினோராம் பாவத்தி லிருந்தால் ஜாதகருடைய தகப்பனர் சுகமுடை யவர், தயாள குணமுடையவர், ஹரிசங்கர பக்தியுடையவர், தேவப் பிராமண விசுவாசியாவர், உத்தியோகப் பிரசித்தி யுடையவர், க்ஷேத்திர மூலம் சுகமுடையவர், பாலியம் முதல் சுகமுடையவர், மத்திய அந்திய வயதுகளில் அற்ப

சுகமுடையவர், வயோதிக வயதில் புத்திரரால் சுகமுடை யவர், மனைவி வமிச ஜனங்களிடம் அன்புடையவர், மனைவியாலும் சுகமுடையவர், பிரபல உத்தியோக ஜீவன முடையவர், குடும்பியாவர், வெகு ஜனரக்ஷகராவர், சேர்க்கவும் கலைக்கவும் வல்லவர், பிரபுவுக்குச் சமமான (நீதி), நடத்தை யுடையவராவார்.

(88) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவத்தில் கேது இருந்தால் ஜாதகருடைய தகப்ப னருக்கு யோகபங்க முண்டாகுமென்றும் தகப்பனர் விசார முடையவர் என்றும் சேது ஸ்நானம் முதலிய புண்ணியத்தால் பிதுரு பிரீதியால் இவர் சுகமடைவார் என்றும் சொல்லப்படுகிறது. பிதுருப் பிரீதி சாந்தி செய்யாவிடில் அரிஷ்டமும் தரித்திரமும் தகப்பனருக்கு உண்டாகும், ஜாதகருடைய மூன்றுந்தசையில் ஜாதக ருடைய தகப்பனர் மரிப்பார்.

(89) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம் பாவாதிபதி மிதுன ராசியில் ராகுவுடன் கூடி யிருந்து நான்காம் பாவத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகருடைய தாய் விசேஷ சுக முடையவள், பதிபக்தி யுடையவள், புத்திரி புத்திர பிரசவ முடையவள், ஜாதகர் அம்மான் சுகமுடையவர், அம்மான் பிரசித்தி யுடையவர், ஜாதகர் தன் தாய் வமிச சுகமுடையவர், ஜாதகருடய தாய் ஜாதக ருடைய மூன்றுந்தசையில் மரிப்பாள்.

(90) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய புதன் ஐந்தாம் பாவத்தில் சூரியனுடன் கூடி யிருந்தால் ஜாதகர் ஒரு பின் சகோதரனுடையவ ராவர், நான்கு சகோதரிக ளுடையவர், முன்பின் சகோதரர்கள் இவர்களைவிட அதிகம் இருந்தாலும் அதிகமாக உள்ளவர்கள் மரித்து விடுவார்கள்.

(91) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி மாலிகா யோக ஜாதகத்தில் குஜத்திரிம்சாம்சத்தில் பிறந்த ஜாதகர் கறுப்பு நிற முடையவராவர், வாததேக முடையவர், சம

அங்கங்க ளுடையவர், அறிவாளி, கல்வியுடையவர், விவேகி, சுயவித்தையில் சதுரன் ஆவர்.

(92) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் சனி யிருந்தால் ஜாதகர் யவ்வன வயதில் நல்ல அறிவாளியாவர், பாலியத்தில் மந்த புத்தி யுடையவராவர், ஊகமும் ஊகித்து விலக்கவும் தெரிந்தவர், பிதுரு மாதுரு சுகமுடையவர், தாய் வமிசத்தில் அதிக சுகமுடையவர், ஜாதகருடைய அம்மான் அதிக சுகமுடையவர், அம்மானால் ஜாதகர் அதிக சுகமடைவார், பிதுரார்ஜித க்ஷேத்திர போகியாவர், பாலியத்தில் அற்ப சுகி, இருபது வயதிற்குமேல் பிரசித்தி யுடையவராவர், சுயப் பிரபலமாக தனம் சம்பாதிப்பவர், அம்மானால் உத்தியோகமும் கீர்த்தியும் இருபத்தைந்தில் விசேஷமும் ஜாதகருக்கு ஏற்படும், அம்மானுக்கு விசேஷ பிரபலமும் ஜாதகருக்கும் பிரபலமும் முப்பதுக்குமேல் ஜாதகருக்கு நல்ல பாக்கியமும், ஐம்பதில் புத்திர சுகமும், பிரபல உத்தியோகக் கீர்த்தியும், க்ஷேத்திர கிராமாதிபத்தியமும் ஏற்படும். ஜாதகர் பின் சகோதர சுகமுடையவர், ஆயுள்வரை சுகியும் ஆவார்.

(93) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி ஐந்தாம் பாவத்தில் சூரியனிருந்தால் ஜாதகர் சில புத்திர நாசமுடையவராவர், அதற்காகப் பானுவார விரதம் செய்ய வேண்டும்; சொர்ண சூரிய தானமும் செய்தால் ஜாதகர் சந்தான விருத்தி யடைவார், ஆயுளுடைய இரண்டு புத்திரரும் மூன்று பெண்களு முடையவராவர்.

(94) **ஜன்ம லக்கினம் :—மேஷம், நாடி அம்சம் :— சுமநாம்சம்.** ஜன்ம லக்கினம் மேஷம் (சும நாம்சம்) பூர்வ பாகம் ஆகிக் குரு லக்கின கேந்திரத்தில் இருந்தால் ஜாதகருடைய தாய்க்குப் பிரசவத்தில் அற்ப வேதனை யுண்டாகும், அப்போது பன்னிரண்டாம் பாவத்தில் சூரியனிருந்தால் உத்தர பாகத்தில் பிறந்த ஜாதகருடைய தாய்க்குப் பிரசவத்தில் அதிக வேதனை யுண்டாகும், சூதிதோஷ பயமுண்டாகாது, ஜாதகருக்குப் பாலரோகம் முதலிய சிசுக்களுக்குறிய ரோக முண்டாகும்.

(95) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிக் குரு லக்கின கேந்திரத்திலும் எட்டாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலும், மூன்றும் பாவத்தில் சனியும் இருந்தால் ஜாதகர் சகல தோஷங்களும் விலகி அறுபத்தெட்டு வயதடைவார், முப்பத்தாறு ஐம்பத்துமூன்று இந்த வயதுகளில் ஜாதகர் தேக பீடையும் அறுபதில் அபமிருத்து பயமும் அடைவார், அக்காலங்களில் சாந்தியால் சாந்தியும் அடைவார்.

(96) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி மூன்றும் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் இருந்து ஒன்பதாம் பாவத்திலிருக்கப்பட்ட செவ்வாய் குருவால் பார்க்கப் பட்டால் ஜாதகர் ஒரு இளைய சகோதரனும் ஒரு இளைய சகோதரியு முடையவராவர்.

(97) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிச் சூரியன் சுக்கிரனுடன் கூடி பன்னிரண்டாம் பாவத்தில் இருந்து ஒன்பதாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகருடைய தகப்பனார் அற்பசுகி, சகோதர சுகமுடையவர், ஹரி சங்கர பக்தி யுடையவர், தேவப் பிராமண பக்தி யுடையவர், வியாபாரத்தில் ஜீவன முடையவர், பற்பல வியாபாரத்தால் தனமடைவார், திரவிய சம்பாதனையில் சமர்த்தர், சுயவித்தையில் வல்லவர், க்ஷேத்திர மூலமாயும் விவசாயத்தாலும் பலனுடையவர், பாலிய வயதில் அற்ப சுக முடையவர், மத்தியத்தில் அதிக தனமடைவார், சகோதரனால் சுகமுடையவர், இவர் ஜாதகருடைய இரண்டாந் தசையில் மரித்து விடுவார்.

(98) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிப் பதினோராம் பாவத்தில் நான்காம் பாவாதிபதி யிருந்து சுக்கிரன் தன் உச்சராசியில் இருந்தால் ஜாதகருடைய தாய் சுக முடையவள், நான்காந்தசை சுயபுக்தியில் மரிப்பாள்.

(-9) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிச் சனித் திரிம்சாம்சத்தில் மாலிகா யோகத்தில் பிறந்த ஜாதகருக்குச் சரீரம் வெளுப்பு நிறமாகவிருக்கும், இவர் பித்ததேகமும், கொஞ்சம் வாயுசீற்றமு முடையவராவர், ரூப லக்ஷணமும் சம அங்கங்களு முடையவர், திடமானவராவர்.

(100) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிக் குரு லக்கின கேந்திரத்தில் இருந்தால் ஜாதகர் சாத்துவீக குண முடையவர், கல்வி அறிவுடைய விவேகி, சுயவித்தையில் சதுரர், சுசீ, எழுதுவதில் சமர்த்தர், கல்வியுடையவர்,

சரசமுடையவர், தேவப் பிராமண விசுவாசி, ஹரி சங்கர மதத்தை யடைபவர், பிதுரு சுகம் அற்ப முடையவர், சிற்றப்பரால் ஜாதகர் அதிக சுகமுடையவர், பிதுரார்ஜித தனமுடையவர், சுயார்ஜிதமு முடையவர், சொர்ண வியாபார முடையவர், ரத்ன. தான்னிய வஸ்திராதிகளால் வியாபாரம் செய்து ஜீவனமும் தனமும் அடைவார், பதினாறு வயது முதல் பிரசித்தியும், இருபது வயது முதல் விசேஷமும், க்ஷேத்திரக் கிராம விசாரணையு முடையவர், இருபத்தைந்து வயது முதல் யோகமும் அடைவர்.

(101) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிச் சுக்கிரன் பன்னிரண்டாம் பாவத்தில் சூரியனுடன் கூடி யிருந்தால் ஜாதகர் மனைவி கொஞ்சம் ரோக மடைவாள், வேறு சிலர் ஜாதகர் இரண்டு மனைவிகளை யடைவார் என்று எண்ணுகின்றனர், விவாகமான பிறகு ஜாதகர் தீபாந்தர வஸ்து வியாபாரத்தால் தனமடைவார்.

(102) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி ஐந்தாம் பாவாதிபதி சுக்கிரனுடன் கூடி பன்னிரண்டாம் பாவத்தில் இருந்தால் முதலில் பெண் குழந்தை யுண்டாகும், பிறகு துர்க்காதானம் செய்ய வேண்டும், செய்த பிறகு புத்திர உற்பத்தி யுண்டாகும், ஜாதகர் இரண்டு புத்திரரும் புத்திரிகளு முடையவராவர்.

(103) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காந் தாராதிபதியாகிய புதன் பதினோராம் பாவத்தில் சந்திரனுடன் கூடி யிருந்து அவர் தசை வந்தால் ஜாதகர் அந்தத் தசையில் விசேஷ சுகமும் பூமி வியாபார லாபமும் அடைவார்.

(104) **ஜன்ம லக்கினம் மேஷம், நாடி அம்சம் :— கோகிலாம்சம் :—** ஜன்ம லக்கினம் மேஷம் (கோகிலாம்சம்) பூர்வபாகம் ஆகிச் செவ்வாய் துலா ராசியில் வாருணம்சத்தில் இருந்தால் தேவாலயத்துடன் கூடிய புண்ணிய தேசத்தில் சமுத்திரப் பிராந்தியத்தில் ஜாதகருக்கு ஜனனமும், உத்தர பாகத்தில் நதிப் பிராந்தியத்தில் ஜனனமும், சமுத்திரப் பிராந்திய வாசமும் நேரிடும்.

(105) ஜன்மலக்கினம் மேஷம் (கோகிலாம்சம்) ஆகிப் பூர்வபாகத்தில் செவ்வாய் லக்கின பாவத்தில் இருந்தாலும் இதைப் பார்த்தாலும் ஜாதகருடைய தாய்க்குப் பிரசவத்தில் அற்பவேதனையும் உத்தரபாகத்தில் வெகுவேதனையு

முண்டாகும், சூதிதோஷ பயமுண்டாயினும் அக்காலம் தாய் சுகமடைவாள், வேறு சிலர் ஜாதகர் கொடி சுற்றிப் பிறப்பார் என்று எண்ணுகின்றனர்.

(106) ஜன்மலக்கினம் மேஷம் ஆகி லக்கின பாவாதிபதியும் எட்டாம் பாவாதிபதியும் கேந்திரபாவத்தில் துலா ராசியில் இருந்து பத்தாம் பாவாதிபதி மித்திர ராசியில் இருந்தாலும் ஒன்பதாம் பாவாதிபதியுடன் பத்தாம் பாவாதிபதி கூடியிருந்தாலும் ஜாதகர் மத்திய வயதாக எழுபது வயதடைவார். முப்பத்தாறு ஐம்பத்திரண்டு அறுபது இந்த வயது காலங்களில் இவருக்குத் தேகபீடை யுண்டாகும். அக்காலங்களில் விஷ்ணு சகஸ்திரநாம ஜபமும் கிரகசக்கிர தானமும் செய்தால் ஜாதகர் ஆயுள் விருத்தியை யடைவார்.

(107) ஜன்மலக்கினம் மேஷம் ஆகி ஆறும் பாவத்தில் ஒன்பதாம் பாவாதிபதியும் சூரியனும் கூடியிருந்தால் ஜாதகருடைய தகப்பனார் சுகமடைவார், தயாள குணமுடையவர், ஹரிசங்கர பக்தியுடையவர், மேற்படி சூரியன் மங்களாம்சத்தில் இருந்தால் ஜாதகருடைய தகப்பனார் தேவப்பிராமண விசுவாசி. ஆஸ்திகர். சத்தியவாதி. தர்மமறிந்தவர், கல்வி அறிவுடைய விவேகி வைசிய விருத்தியால் ஜீவனமுடையவர், கன்னி தேவதையைப் பூஜிக்கும் வமிசத்தில் பிறந்தவர், க்ஷேத்திர கிராமாதிபதி, பிரபு யோகமுடையவர், தனிகர், பிரபு ஆவார், சுய ஜனங்களை ரக்ஷிப்பவராவார், குடும்பி, ஜன ரக்ஷகர், தன சம்பாதனையில் சமர்த்தர், திட்டமாய்த் தெரிந்தவர், தியாகி, போகி, நல்ல தர்மாத்துமா, தேவப்பிராமண பக்தியுடைவர், நானு சாஸ்திரங்களிலும் பிரியர், விசேஷ விஷ்ணுபக்தி யுடையவர், குருபக்தி யுடையவர், சுயகர்மாச்சார முடையவர், வயோதிக வயதில் சித்தசுத்தியுடையவர், பாலியம் முதல் சுகி,மத்திய வயதில் கீர்த்தி யுடையவ ராவார்.

(108) ஜன்மலக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி சனியுடன் கூடி ஆறும் பாவத்தில் இருந்தால் ஜாதகருடைய தகப்பனுருக்கு நான்கு அல்லது ஐந்து மனைவிகள் நாசமடைவார்கள். இரு மனைவியரிடத்தில் சற்புத்திருண்டாவர். தகப்பனார் வியாபாரத்தால் ஜீவனம் செய்வார். நரவாகனுதி சகல பாக்கிய முடையவராவர், ஜாதகருடைய மூன்றாந் தசையில் மரித்துவிடுவார்.

(109) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் கரளாம்சத்தில் இருந்தால் ஜாதகருடைய தாய் அற்ப சுகியாகி ஜாதகருடைய ஜன்ம தசையில் மரிப்பாள்.

(110) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிச் சந்திரன் தனுசு ராசியிலும் குருகன்னியா ராசியிலும் இருக்கும் கேசரி யோகத்தில் சனித்திரிம்சத்தில் பிறந்த ஜாதகர் வெளுப்பு நிறமுடையவராவர், சமஉயர முடையவர், வாத தேக முடையவர், அற்பதன முடையவர், அழகர், புகழு முடையவர், சமர்த்தர், கல்வி யறிவுடைய விவேகி, சுய வித்தையில் வல்லவர், ஸ்ரீமான், எழுதுவதில் சமர்த்தர், வியாபாரத்தில் ஜீவன முடையவர், பற்பல வியாபாரத்தால் தனமடைவார், பிதுரார்ஜித முடையவர், சுயார்ஜிதமு முடையவர், பாலியம் முதல் புகழுடைவர், பதினாறும் வபதில் பிதாவால் பிரசித்தியும் பதினேழில் சுயப்பிரபலமும் இருபதுக்குமேல் யோகமும் உண்டாகும். முப்பது வரையிலுமிப்படியே நடக்கும், நாற்பதில் விசேஷ பாக்கியமும், நரவாகனமும், தனமும், ரத்னமும் க்ஷேத்திரமும், முதலியன ஜாதகர் அடைந்து சுகபோகங்களு முடையவராவார்.

(111) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகி ஏழாம் பாவத்தில் செவ்வாயிருந்தால், ஜாதகர் மனைவியால் விசார மடைவார், மேலும் இத்துடன் ஏழாம் பாவாதிபதியும் பலிஷ்டராகிப் பாபருடன் கூடினால், ஜாதகர் இருதார மடைவார், இப்படி இரு மனைவிய ரில்லாவிடில் கர்ப்ப காலத்தில் மனைவி சங்காதோஷ மடைவாள்.

(112) ஜன்ம லக்கினம் மேஷம் ஆகிப் பன்னிரண்டாம் பரவத்தில் சனியும் இராகுவும் கூடி இருந்தால் ஜாதகருக்கு விவாகமான வருஷத்தில் வியாபாரத்தால் தனக்ஷயம் உண்டாகும்.

(113) ஜென்ம லக்கினம் மேஷமாகி நிர்மலாம்சத்தில் பூர்வ பாகத்தில் பிராமணர் காலத்தில் யிறந்த ஜாதகர் பிராமண ஜன்மம் உள்ளவராகவும், புத்திசாலியாகவும், வெளுப்பான தேகத்தை உடையவராகவும் இருப்பார். இவர் மூன்றாவது கர்ப்பமாகவே அல்லது நான்காவது கர்ப்பமாகவே விருப்பார். ஜன்மலக்கினம் மேஷமாகி நிர்மலாம்சத்தில் பூர்வபாகத்தில் பிறந்தவருக்கு லக்கினாதிபதியாகிய அங்காரகன் சுக ராசியில் சுயாம்சத்

தில் இருந்து சுபர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகர் மஹா நதிக்கரையில் உள்ள ஒரு அக்ரஹாரத்தில் பிறந்தவராக விருப்பார்; உத்திராம்சத்தில் பிறத்தவர் நதிக்கரையிலுள்ள நகரத்தில் ஜனனமானவராக விருப்பார்.

(114) ஜென்ம லக்கினம் மேஷமாகி அங்காரகன் லக்கினத்திற்கு நான்காவது பாவத்தை அடைந்து இந்தச் சுகாதிபதி நான்காவது பாவாதிபதி பத்தாவதி பாவத்தில் இருந்தால் நிர்மலாம்சத்தில் பிறந்த ஜாதகரின் தாயார் தீர்க்காயுள் உள்ளவளாயும் பிரசவகாலத்தில் அற்ப பிரசவ வேதனையை யுடையவளாகவும் இருப்பாள்; பாக்கிய வம்சத்தில் பிறந்தவளாகவிருப்பாள். சகோதரர்களுடன் கூடினவளாகவுமிருப்பாள். இவளுடைய வம்சத்தில் அதிக சௌக்கியமுண்டு, ஜாதகருடைய மாமனுக்கு (அம்மானுக்கு) நல்ல பிராபல்யமும் செல்வாக்கும் இருக்கும். பூர்வ பாகத்தில் பிறந்த ஜாதகருக்குக் கொஞ்சம் பாலாரிஷ்டம் உண்டாகும், உத்தர (பின்) பாகத்தில் பிறந்தவர் அதிக பாலாரிஷ்டத்தினால் பீடிக்கப்பட்டவராக விருப்பார். சந்திரன் பாப க்ஷேத்திரத்தை அடைந்து பாபிகளால் பார்க்கப்பட்டோ அல்லது இவர்களுடன் கூடியோயிருந்தால் ஜாதகருக்குப் பாலாரிஷ்டபயம் இருந்தாலும் இவர் கஷ்டப்பட்டுச் சுகத்தை அடைவார், மூன்றாவது அல்லது. ஐந்தாவது வயதில் கொஞ்சம் தேக பீடையை அடைந்து சீக்கிரத்தில் ஆரோக்கியத்தை அடைவார்.

(115) ஜன்ம லக்கினம் மோஷம் (தன தாம்சம்) ஆகிப் பூர்வ பாகத்தில் பிறந்த ஜாதகர் சூத்திர ஜாதியில் ஏழாவது கர்ப்பத்தில் வனப் பிராந்தியத்திலுள்ள ஒரு குக்கிராமத்தில் பிறந்தவராவர். உத்திராம்சத்தில் பிறந்தவர் வைசிய குலத்தில் சமுத்திரத் தீரத்தில் அல்லது கிரிப்பிராந்தியத்தில் தக்ஷிண உத்திர வீதியில் இரண்டாவது கர்ப்பத்தில் பிறந்தவராவர். பூர்வ பாகத்தில் பிறந்த ஜாதகர் ஹரிசங்கர பக்தியுடையவராவர், ஜேஷ்ட சகோதரருடையவர், இளைய சகோதரர் எட்டுவயதிற்குப் பிறகு நாசமாவார், ஜாதகருக்கு மூன்று சகோதரிகளுண்டு இவர்கள் பால்யவயதில் விதவைகளாவார்கள், ஒரு சகோதரி புத்திரர் புத்திரிகள் உடையவளாவள், இவளுடைய புருஷன் பாக்கிய சம்பண்ணராக விருப்பார், ராஜ துவாரத்தில் பிரசித்தியுடையவராக விருப்பார். உத்திராம்சத்தில் பிறந்த ஜாதகர் மூத்த சகோதரவீன முடையவராவர், இளைய சகோதர ஹீனமுடையவராவர், இரண்டு

சகோதரிகளையுடையவராவர்; இந்தச் சகோதரிகள் வெகு காலம் தீர்க்க சுமங்கலிகளாக விருப்பார்கள்.

(116) ஜென்ம லக்கினம் மேஷம் (தனதாம்சம்) ஆகி மாதுரு ஸ்தானாதிபதியாகிய சந்திரன் பதினோராவது வீட்டில் அல்லது லக்கின கேந்திரத்தில் இருந்தால் பூர்வ பாகத்தில் பிறந்த ஜாதகருடைய மாதா தீர்க்காயுளை உடையவளாவாள், உத்திராம்சமானால் விபத்தாய (மூன்றாவது நட்சத்திர) தசை முடிவில் ஜாதகருக்கு இருபத்திரண்டாவது வயதில் மாதுரு நாசமடைவாள், ஜாதகருக்கு இருபத்தோராவது அல்லது முப்பத்தொன்பதாவது வயதில் தாயார் மரணத்தை அடைவாள்.

(117) ஜன்ம லக்கினம் மேஷம் (தனதாம்சம்) ஆகிப் புத்திர ஸ்தானமாகிய ஐந்தாவது பாவத்தில் சந்திரன் இருந்தால் ஜாதகருக்கு ஸ்திரீ பிரஜைகள் (குழந்தைகள்) அதிகமாக விருக்கும்; ஆண் குழந்தைகளுக்குச் சோகமும் கஷ்டமும் ஏற்படும்; இந்த தோஷப் பரிகாரத்திற்காக ஹரிதாலிங்க அர்ச்சனை செய்யவேண்டும்.

(118) ஜன்ம லக்கினம் மேஷம் (தனதாம்சம்) ஆகிச் சந்திரன் ஐந்தாவது வீட்டில் இருந்தால் சந்திரனுக்கு நான்காவது பாவதிபதியினுடைய தசையில் ஜாதகருடைய தகப்பனாருக்கு ஆயுள் சம்சயம் நேரிடும், அல்லது சந்திரனுக்கு எட்டிற்குடையவருடைய தசையில் ஜாதகருடைய தகப்பனாருக்கு மாரகம் ஏற்படும்.

(119) ஜன்ம லக்கினம் மேஷம் (தனதாம்சம்) ஆகி லக்கினத்திற்கு எட்டாவது பாவாதிபதியினுடைய தசை காலத்தில் சனி கோச்சாரத்தில் பன்னிரண்டில் சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகருக்குச் சர்வமும் நாசமடையும்.

(120) ஜன்ம லக்கினம் மேஷம் (ஷமாம்சம்) ஆகிப் பூர்வ பாகத்தில் பிறந்த ஜாதகர் வைசிய குலத்தில் பிறந்தவராவர், நித்திய சுகியாக விருப்பார். இவ்விதமிருந்து அங்காரகனுடைய திரிம்சாம்சத்தில் பிறந்தால் ஜாதகர் கிரிபிரரந்தியத்தில் (மலை நாட்டில்) ஒரு நகரத்தில் விஷ்ணுவினுடைய சந்நிதானத்தில் கிழக்கு மேற்குத் தெருவில் பிறந்தவராவர், ஷமாம்சத்தில் உத்திர பாகத்தில் பிறந்த ஜாதகர் சூத்திர ஜாதியில் வடக்குத் தெற்கு வீதியில் உத்தர வாசற்படியுள்ள வீட்டில் பிறந்த ஜாதகர் எட்டாவது அல்லது ஒன்பதாவது கர்ப்பத்தில் பிறந்தவராவர், சியாமளவர்ண ரூபமுள்ளவர், உன்னதமான தேகத்தையுடையவர், ரஜோகுணமுடையவர், லேக்கிய வித்தையை யுடையவர், யுக்தியுள்ளவர், மதுரமான பாஷையைப் பேசுபவர், தேவப்பிராமணர் பக்தியுடையவர், சகோதரர்கள் சகோதரிகள் உடையவர் ஆவார்.

(121) ஜன்ம லக்கினம் மேஷம் (ஷமாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் பிறந்த ஜாதகருக்குச் சகோதரஸ்தானாதிபதியாகிய புதன் (மேஷ ராசியில்) மேஷாம்சத்தில் இருந்து அங்காரகனால் பார்க்கப் பட்டால் ஜாதகருக்கு இளைய சகோதரங்கள் நாசமாவார்கள், மூத்த சகோதரர்கள் உண்டு, இவர்களில் இருவர் தீர்க்காயுளை உடையவர்களாவார்கள், ஜாதகருக்குச் சகோதரிகள் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள், இவர்களில் ஒரு சகோதரி புத்திரர்கள், புத்திரிகளை உடையவளாவள், ஒரு சகோதரி விதவையாவள். நாடி அம்சத்தின் உத்தரப் பாகத்தில் பிறந்த ஜாதகருக்கு மூத்த சகோதரர்கள் நாசத்தை அடைவார்கள், இளைய சகோதரர்கள் உயிருடன் இருப்பார்கள். ஜாதகர் மானியாக விருப்பார், நான்கு சகோதரிகளை யுடையவராக விருப்பார்.

(122) ஜென்மலக்கினம் மேஷம் (ஷமாம்சம்) ஆகிப் பிதுர்ஸ்தானாதிபதியாகிய குரு (கும்பத்தில்) கும்பாம்சத்தில் இருந்துகொண்டு சூரியனால் பார்க்கப்பட்டு, ராகுவால் கூடப்பட்டிருந்தாலும் ஜாதகருடைய தகப்பனார் சகோதர நாசத்தை யுடையவராவர், பாலியத்தில் கொஞ்சஞ் சௌக்கியத்தை யுடையவர், எவ்வன வயதில் ருண பீடையை யுடையவர், மத்திய வயதில் சுவல்ப பலனை யுடையவர், வாக்குச் சாமர்த்தியம் உடையவர், அதிகமான புத்தியை யுடைவர், ஆவார்.

(123) ஜென்மலக்கினம் மேஷம் (ஷமாம்சம்) ஆகி மாதுரு ஸ்தானாதிபதியாகிய சந்திரன் (கும்பராசியில்) கும்ப நவாம்சத்தில் (இராசியில்) கேதுவுடன் கூடியிருந்து குருவினுடைய பார்வை (அல்லது சேர்க்கையை) அடைந்திருந்தால் ஜாதகருடைய தாயார் தீர்க்காயுளுள்ளவள், மானியாக விருப்பாள், இவளுடைய மூத்த சகோதரி நீண்ட காலம் மாங்கல்யத்தை யுடையவளாக விருப்பாள், நீண்ட ஆயுளை உடையவளாவள், ஜாதகரின் தாயாருடைய சகோதரர்களும் சகோதரிகளும் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள்.

(124) ஜென்மலக்கினம் மேஷம் (ஷமாம்சம்) ஆகி அம்மான் காரகனாகிய புதன் தன்னுடைய உச்ச ராசியில் மேஷ நவாம்சத்தில் இருந்துகொண்டு சனியால் பார்க்கப் பட்டால், சனி கோச்சாரத்தில் லலனத்தில் (ஏழாவது பாவத்தில்) சஞ்சாரஞ் செய்யுங் காலத்தில் ஜாதகருடைய

அம்மானுக்குக் கெண்டம் ஏற்படும். இந்தக்கெண்டம் விபத்தாய தசையில் (மூன்ருவது நட்சத்திர தசையில்) ஏற்படும்.

(125) ஜென்மலக்கினம் மேஷம் (ஷமாம்சம்) ஆகி நான்காவது பாவாதிபதியாகிய சந்திரன் (மிதுனராசியில்) மிதுன நவாம்சத்தில் இருந்துகொண்டு ராசிச் சக்கிரத்தில் குருவால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகர் ராகு திசையில் சுக்கிரனுடைய புக்தியில் ஒரு புதிய வீட்டை வாங்குவார், அல்லது அடைவார், வியாபாரத்தில் அதிகமான லாபத்தை அடைவார், லக்ஷிமி வீட்டில் வாசஞ் செய்வாள், லக்ஷிமி கடாக்ஷமுண்டு, சகல சுகபோகங்களையும் சம்பத்துக்களை யும் உடையவராவர், அதிகமான செல்வத்தை அடைவார், இவருடைய வருமானமும் செலவும் சமமாக விருக்கும், விபத்தாராாதிபதி (மூன்ருவது நட்சத்திர தசையில்) தசையில் சூரியனுடைய புத்தியில் சனி கோச்சாரத்தில் விருச்சிகத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய மூத்த சகோதரர் நாசமடைவார்.

(126) ஜென்மலக்கினம் மேஷம் (ஷமாம்சம்) ஆகி இரண்டாவது பாவாதிபதியாகிய சுக்கிரன் துலா நவாம்சத் தில் இருந்து கொண்டு இராசிச் சக்கரத்தில் குருவால் பார்க்கப்பட்டால் குரு கோச்சாரத்தில் ரிஷப ராசியில் சஞ்சாரம் செய்யும்போது ஜாதகருடைய குடும்பத்தில் விவாகம் நடக்கும்.

(127) ஜென்மலக்கினம் மேஷம் (ஷமாம்சம்) ஆகி லாபாதிபதியாகிய சனி நவாம்சத்தில் இருக்கின்ற இராசி யின் திரிகோண ராசிகளில் சனி தன்னுடைய கோச் சாரத்தில் சஞ்சாரஞ் செய்யுங் காலத்தில். அல்லது பதினோராவது பாவாதிபதியாகிய சனி இராசிச் சக்கரத்தில் எந்தெந்த இராசிகளைப் பார்க்கின்ருரோ அந்தந்த மூன்று ராசிகளின் திரிகோண ராசிகளில் சனி கோச் சாரத்தில் சஞ்சாரஞ் செய்யுங்காலத்தில் ஜாதகருடைய தாயாருக்கு மரணம் நேரிடும்.

(மலர் மூன்றின் மேஷ லக்கினம் இத்துடன் முற்றிற்று.)

குறிப்பு:—இதர அநேக மேஷ லக்கின பலாபலன்கள் நான்காவது மலரில் கொடுக்கப்படும்.

முத்துக்குமரன் பிரஸ், சென்னை.

புத்தக விளம்பரம் 1957-ஸு

ஜாதக கணிதம் இரண்டாம் பாகம் என்னும் ஜாதகப் பலா பலன்கள் நிர்ணயம் .— இதில் கிரக சட்பலம், துவாதச பாவ பலம், ஜாதச கணிதத்தின் முதல் பாகத்தின் முன்னுரையில் குறித்துள்ள உச்ச பலம், திக்குப்பலம் பட்ச பலம், கிரக யுத்த பலம், ஹோரா பலம், அயன பலம், கிரக திருஷ்டிப் பலம் முதலிய **24** வித பலன்கள் முதலிய கிரக பாவ வலிவுகளை அநுசரித்துப் பலன்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும் ஜாதக கணிதம் பிரகாரம் கிரக சட்பலம், பாவ பலம் முதலியவைகளைக் கணிக்கச் சந்தர்ப்பப்படாத போது சாதாரண வழி பிரகாரம் கிரகங்களின், பலத்தை யூகித்துப் பலாபலன் நிர்ணயஞ்செய்யும் மார்க்கத்தையும் கொடுத்திருக்கிறது. மிகவும் புராதீனமான சிறந்த கிரந்தங்களில் கொடுக்கப்பட்டுள்ள விஷயங்களில் மிகவும் அவசியமாயும், சிறந்ததாயும் உள்ள விஷயங்களையும், விதிகளையும் இப்புத்தகத்தில் கொடுத்திருக்கிறது. சில நாடிக் கிரந்தங்களில் கொடுக்கப்பட்டுள்ள விதிகளையும் இந்தப் புத்தகத்தில் கொடுத்திருக்கின்றது. இது ஜாதப் பலாபலன்கள் சொல்லுவதற்கு மிகவும் உசயோகமானது. இது சி. ஜி. ராஜன் பி. ஏ., (மாத்தமாடிக்ஸ்) அவர்களால் எழுதப்பட்டது. டிம்மி சயிஸ் **414**-பக்கம் உடையது ரூ. **4-0-0**

ஜாதக கணிதம் மூன்ரும் பாகம் என்னும் ஜாதக ராஜ மனோரஞ்சிதம் மலர்-1 :—இதில் மேஷம் முதல் மீனம் வரையிலுமுள்ள ஒவ்வொரு லக்கினத்திற்கும் நூற்றறுபத்தைந்து முதல் இருநூற்றறுபத்து நான்கு வரையிலுள்ள விதிகள் அதாவது மொத்தத்தில் இரண்டாயிரத்து ஐந்நூற்று பதினொன்று வித கிரக அமைப்பு விதிகளும் அவைகளால் உண்டாகக் கூடிய பலா பலன்களும் விவரமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் ஜாதகருடைய சர்வ பலன்களும், அவருடைய தாய், தகப்பின், அவருடையசகோதர சகோதரி, அயருடைய தகப்பனுருடைய சகோதர சகோதரி அவருடைய அம்மான், அவருடைய மாற்ருந்தாய், அவருடைய மாற்ருந் தாயின் புத்திர புத்திரிகள், அவருடைய மாமனர் ஆகிய இவர்களுடைய பலன்களும் அந்தந்த ஆதிபத்திய காரக கிரக நிலைகளையும், கிரக பார்வையும், கிரக சம்மந்தத்தையும் அனுசரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப் பலா பலன்கள் விருத்த வசிஷ்டர், பராசரர், நாரதர், காசிபர், ஜெய முனி, கர்கர், பிருகு, சத்தியாச்சாரி, மனு, விஷ்ணு, ஈஸ்வரர், யவனர், மயன் இவர்கள் கொள்கைப்படி கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது சி. ஜி. ராஜன் பி. ஏ. (மாத்த மடிக்ஸ்) அவர்களால் எழுதப்பட்டது. டிம்மி சயிஸ் **348** பக்கம். விலை ·ரூ. **6-0-0**

ஜாதக கணிதம் நான்காம் பாகம் என்னும் ஜாதக ராஜ மனோரஞ்சிதம் மலர் 2 :– இதில் மேஷம் முதல் மீனம் வரையிலுமுள்ள ஒவ்வொரு லக்கினத்திற்கும் தொண்ணூறு முதல் நூற்றைம்பத்தெட்டு வரையிலுமுள்ள விதிகள் அதாவது மொத்தத்தில் ஆயிரத்து ஐந்நூற்றைம்பது வித கிரக அமைப்பு விதிகளும், அவைகளால் உண்டாகக்கூடிய பலாபலன்களும் விவரமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சி. ஜி. ராஜன் பி. ஏ., மாத்[illegible]மாடிக்ஸ் அவர்களால் எழுதப்பட்டது. டிம்மி சயிஸ் **320**-பக்[illegible] உள்ளது. ரூ. **4- 0-0**

புத்தக விளம்பரம் 1957-ஸு

தெசாபுத்தி சிந்தாமணி :— இப்புத்தகத்தில் பல அருமையான ஜோதிட கிரந்தங்களிலிருந்து சாராமசத்தை எடுத்து ஒன்ருகச் சேர்த்து ஒழுங்காக அமைத்து எழுதி இருக்கின்றது. ஜாதக பலா பலன்களைச் சொல்ல வேண்டுமானுல் அப்பலன்கள் நடைபெறும் காலம் முக்கியமானது. இக்காலத்தை தெசாபுத்தி என்ற கிரக பலன்கள் நடக்கும் காலத்தைக் குறிக்கின்ற ஜோதிடப் புத்தகங்களால் அறிய வேண்டுமே ஒழிய வேறே வழி ஒன்றும் கிடையாது இப்படிப்பட்ட புத்தகங்களில் இப்புத்தகம் மிகவும் அறுமையானது. இப்புத்தகம் பலாபலனைச் சொல்லத் துனிகின்ற ஒவ்வொரு ஜோதிடரிடத்திலும் இருக்க வேண்டியது அவசியம். மற்றப் புத்தகங்களைப் போல் இராமல், இப்புத்தகத்தில் தெசா புக்தி பலன்களைக் கிரகங்கள் இராசியிலும், பாவச் சக்கிரத்திலும் இருக்கும் நிலைமையும், அவைகளுடன் சம்மந்தப்பட்ட கிரகங்களையும், அவைகளைப் பார்க்குங் கிரகங்களையும் அநுசரித்து, விபரமாகவும் சொல்லி இருக்கிறது. இது சி. ஜி. போதித்த பிரகாரம் மிகவும் ஜோதிட அநுபோகமும் பயிற்சியுமுள்ள சேந்தமங்கலம். கோமடம். ஸ்ரீனிவாச அய்யங்கரால் எழுதப்பட்டு, சி. ஜி. ராஜன் பி.ஏ., அவர்களால் பார்வையிடப்பட்டது. டிம்மி சயிஸ் **224**-பக்கம் உடையது. ரூ. **3-0-0**

ஜாதக ராஜ பாவ இருவாக்ஷி :- ஆயுள் பாவம் மலர்-1 ஆசிரியர் : சி. ஜி. ராஜன் பி. ஏ., ரூ. 1-10-0

ஜாதக ராஜ பாவ இருவாக்ஷி :- களத்திர பாவம் மலர்-1 ஆசிரியர் : சி. ஜீ. ராஜன் பி ஏ., ரூ. 1-10-0

ஜாதக ராஜ பாவ இருவாக்ஷி :- புத்திர பாவம் மலர்-1 ஆசிரியர் : சி. ஜி. ராஜன் பி. ஏ., ரூ. 1-14-0

ஜாதக ராஜ பாவ இருவாக்ஷி :- ஜீவன பாவம் மலர்-1 ஆசிரியர் : சி. ஜி. ராஜன் பி. ஏ., ரூ. 1- 4-0

ஜாதக ஜம்பு நாதீயம் :- ஜோதிட சாஸ்திர பல பாகத்தில் வல்லவராயிருந்த ஜம்பு நாதீயர் என்றவர் அனேக அபூர்வ விஷயங்களை ஒன்ருகத் திரட்டி துவாதச பாவபலன்கள் விஷயமாய்ச் சமஸ்கிருதத்தில் விஸ்த்தாரமாய் எழுதிய புத்தகத்தின் தமிழ்மொழி பெயர்ப்பு இது ஆகும். ஆசிரியர் : சி. ஜி ராஜன் பி. ஏ., ரூ. 1- 2-0

சர்வார்த்த சிந்தாமணி :- இது ஒரு அருமையான புகழ்பெற்ற பழைய காலத்து ஜோதிட சாஸ்திரம். இது ஜோதிடத்தில் வல்லவராகிய ஸ்ரீவெங்கடேச தெய்வக்ஞரால் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட கிரந்தத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு இதில் அனேக அருமையான விஷயங்கள் அடங்கி இருக்கின்றன.

ஆசிரியர் : சி. ஜி. ராஜன் பி. ஏ., ரூ. 3- 4-0